உ

# "செந்தமிழ்" மூன்றாந்தொகுதியின்

# உள்ளுறை.


அங்கச்சேதன சாஸ்திரம்.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலா[சாரியர். ஙஙஉ.

அசோகன் காலத்துக்குமுன்னும் சிலாசாஸனமுண்டென்பது.— ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ஙஎஉ.

இடைச்சங்கம்.—ஸ்ரீமத்-ஐயன் ஆரிதன். ... ... உஎக.

இரட்டையர்.—பத்திராசிரியர். ... ... ... சசச.

இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்.—ஸ்ரீமத்-கணேசையர். உக. [கூங, கசரு, கஅ௦, உஙரு, ஙஙகூ, சசசா.

உயிர்.—ஸ்ரீமத்-சேற்றூர்-இராமசாமிக்கவிராயர். ... சஙஎ

"ஐயாறதனிற் சைவனாகியும்" என்றதன் வரலாறு.— ஸ்ரீமத்-சேற்றூர். அருணாசலக்கவிராயர். ஙகூக,

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்.— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் M. A. ஙசாங.

ஓரடிந் தமிழ்ச்சொற்கள்.—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. கஅ.

ஓர் தமிழ்ச்சாஸநம்.— ஸ்ரீமத்-எம். நாராயணசாமி ஐயர், பீ. ஏ. [பீ. எல்., க௦ரு.

கம்பர்.—பத்திராசிரியர். ... ... க, சஉ, எஎ, கூஎ.

கம்பாகாலம்.—பத்திராசிரியர் ... ... ... ... கஎக.

கம்பர் குறித்த தமிழ்ப்பெருமை.—பத்திராசிரியர். ... ஙகூரு.

கூத்தரும் குலோத்துங்கன் கோவையும்.—பத்திராசிரியர். கசாச.

கொச்சிதேசத்துக் "காடர்கள்."—ஸ்ரீமத்-ல. அனந்தையர். சசாங.

ந்தரமூர்த்திநாயனர்.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம்.ஏ. ஙகஉ.

செந்தமிழ்க்குத் தொண்டு செய்தோர்.— ஸ்ரீமத்- சேற்றூர். அருணாசலக்கவிராயர். சாசா.

செய்யுள்.—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராயமுதலியார், எம். ஏ., ௪௧௭,
[௩௫௫.

செல்வம்.—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ. ௨௮,
[௯௧.

சென்னிகுலோத்துங்கன் அநபாயன்.—பத்திராசிரியர். ௨௯௮, ௩௪௮.

சேக்கிழார்காலம்.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ. ௧௮௮.

சேதுபுராணம்.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ... ௪௦௭.

சேந்தனூருந் திருமாளிகைத் தேவரும்.— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ., ௩௫௮.

தமிழிலக்கவரலாறு.—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௧௪௯.

தமிழிலக்கவரலாற்றுச் சர்ச்சை.— ஸ்ரீமத்-கோ. வெங்கோபராவ். ௨௩௯.

தமிழ்ப்பெருமை.— ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளை, பீ. ஏ., பீ. எல்,. ௨௪௯, ௨௫௯.

தமிழ்வினைச்சொல்லில் எதிர்காலம்.— *Prof.* ஜூலியன் வின்ஸன், பாரிஸ். ௧௮௫.

தருக்கசூத்திரமுதற்பாடம்.—ஸ்ரீமத்-எஸ். பால்வண்ண முதலி
[யார். ௨௪௩.

தனிச்செய்யுட்கோவை.—ஸ்ரீமத்-சேற்றூர். இராமசாமிக்கவிராயர்.
[௨௯௩, ௩௪௩, ௩௮௭, ௪௮௦.

தாயுமான சுவாமிகள் வரலாறும் அவர் மதக்கொள்கையும் ஸ்ரீமத்-கல்குளம். குப்புசாமி முதலியார் பீ. ஏ,. ௪௭௪.

திருக்குறள்-வீட்டின்பால்.— ஸ்ரீமத்-ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை. பீ.ஏ,. பீ.எல்,. ௨௯௫, ௩௨௨, ௩௫௪.

திருப்பதியைப்பற்றிய சில ஆசங்கை.— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ,. ௧௪௨.

திருமங்கையாழ்வார் காலவாராய்ச்சி.— ஸ்ரீமத்-மு. இராகவையங்கார். ௪௮௩.

திருவெள்ளறைச் சாஸநங்கள்.— ஸ்ரீமத்-பண்டித-நடேச சாஸ்திரியார், பீ. ஏ., ௧௯௦.

தோல்வித்தானம்.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௧௨.

நல்லொழுக்கம்.—ஸ்ரீமத்-டி. என். பார்த்தசாரதி ஐயங்கார். ௩௭௮.

நிருத்தம்.—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ... ... ௯௦.

நூலாராய்ச்சி.—ஸ்ரீமத்-அ. மாதவையர், பீ. ஏ. ... ௪௧௩, ௪௫௦.

பராந்தகன் I.—ஸ்ரீமத்-க. வை. சுப்பிரமணிய ஐயர், பீ. ஏ. ௨௮௮.

பன்னிருமாதப்பெயர்கள்.— } ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௨௩௧, ௩௨௮.

பாண்டவர்காலம்.—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௩௯௯.

பாண்டவர்காலம் II.—ஸ்ரீமத்-மு. இராகவையங்கார். ௩௭௩.

பாரதகாலமும் தமிழரும்.—ஸ்ரீமத்-மு. இராகவையங்கார். ௩௦௩.

பாலமுது.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர். ௩௮௩, ௪௩௩. [௪௮௯.

பிராசீனதர்மங்களின் உயர்வும், இக்காலஆசாரங்களும். ௩௪, ௧௧௭.

புகழேந்திபொட்டக்கூத்தர்.—பத்திராசிரியர். ... ... ௨௯.

புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர். ௪௦, ௨௦௯, ௨௫௭, ௩௪௯, [௩௯௪, ௪௪௦.

புலவிநுணுக்கம்.—ஸ்ரீமத்-சி. கணேசையர். ... ... ௨௮௩.

பொய்யாமை.—பத்திராசிரியர். ... ... ... ௧௩௪.

பொன்பரப்பினனை மகதைப் பெருமாள் கவி.— } ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ,. ௪௨௩.

பௌத்தமதவிசாரணை.—ஸ்ரீமத்-ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை, [பீ. ஏ, பீ. எல். ௧௨௯, ௨௦௧.

மெய்கண்டதேவர்காலம்.—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், எம். ஏ,. ௧௮௯.

வானசாஸ்திரம்.—ஸ்ரீமத்-தி. வேங்கடராம ஐயங்கார். ௧௫௫, ௧௯௦.

“வீரகல் மாஸ்திகல்.”—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், [எம். ஏ,. ௫௫, ௮௭.

வேளிர்வரலாறு.—ஸ்ரீமத் - மு. இராகவையங்கார். ௨௧௨.

ஸ்ரீரங்கம் தமிழ்ச்சாஸநம்.—ஸ்ரீமத்-எம். நாராயணசாமி ஐயர், [பீ. ஏ. பீ. எல்., ௨௫௨.

## "செந்தமிழ்" மூன்றாந் தொகுதியில் வெளிவந்த நூல்கள்.

[முடிந்தவை.]

க. திருச்செந்திற்கலம்பகம்— [இலக்கணக்கொத்துச் சுவாமிநாததேசிகர் இயற்றியது] ஸ்ரீமத்-சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர் பரிசோதித்தது: பகுதி-க, உ.

உ. முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் [கoரு]—பத்திராசிரியர் பரிசோதித்தது. பகுதி-ங.

[முடியாதவை].

ங. இயற்கைப்பொருட்பாடம்.—ஸ்ரீமத்-செ. வீ. இராஜகோபாலாசாரியர். பகுதி-எ, அ, கூ, கo, கக, கஉ.

ச. சுகசந்தர்சனதீபிகை--ஸ்ரீமத்-பண்டித-நடேசசாஸ்திரியார், பகுதி-க-முதல் கஉ-வரை.

ரு. திருவாரூருலா—[அந்தகக்கவி-வீரராகவமுதலியார் இயற்றியது]. ஸ்ரீமத்-உ. வே. சாமிநாதையர் பரிசோதித்தது. பகுதி-ச, ரு, சு, அ, கக, கஉ.

சு. தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியருரை.—பத்திராசிரியர் பரிசோதித்தது. பகுதி-உ, ங, ச, ரு, சு, எ, அ, கூ, கக, கஉ.

எ. விவசாயநூல்—ஸ்ரீமத்-சே. ப. நரசிம்மலு நாயடு, பகுதி-க, உ, ங, ச, ரு, சு.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-ந.] குரோதி ஹு கார்த்திகைமீ [பகுதி-க.

## கம்பர்.

'கல்வியிற்பெரியர்' என்றும், 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் நல்லியற்புலவரெல்லாம் மனமொத்து வாயாரப்புகழும் பெருமாண்புடைய அருமைக் கம்பரின் பெருமைச்சிறப்பு முழுதும், இத்தமிழுலகம் நன்றறிந்து நாளும் பாராட்டுவதேயாம். இக்கவியரசர் வரலாறு, காலம் முதலியன, இக்காலத்து, ஒன்றோடொன்றுவ்வாப் பல்வேறுவகையால் வழங்கப்படுகின்றன. சிறிது பழைய தமிழ் நூல்களையே பெருங்கருவியாகக்கொண்டுநோக்கின், அவற்றது ண்மை இன்னதென்று துணியலாகும். இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாகக் காண்பன:—தமிழ்நாவலர் சரிதை, தொண்டைமண்டலசதகம், சோழமண்டலசதகம், பாண்டிமண்டலசதகம் என்பனவும், பிறவுமாம். இவற்றுட்கண்ட சிலபாடல்களையும் அடிகளையும் ஈண்டு எடுத்தோதி விளக்குதலானே, இத்தெய்வப்புலவரது மெய்வைத்தவரலாறு முதலியன ஒருவாறு நன்குணரலாகும்.

### இவர் ஊர்.

திருவழுந்தூர்த் தாதியை, சோழன், எந்த ஊர் என்று கேட்டபோதுபாடியது.

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபங் குலைந்தவூர்—செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுந்தே டிக்காணா
*வோதகத்தார் வாழுமழுந் தூர். (தமிழ்நாவலர் சரிதை)

---

* ஓது அகத்தார்-ஓதுகின்ற உள்ளமே இடமாகக் கொண்டார்.

## இவர் சாதி.

நாரணன் விளையாட் டெல்லா நாரத முனிவன் சொல்ல
வாரணக் கவிதை செய்தா னறிந்துவான் மீகி யென்பான்
சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூருவச்சன் *
†காரணி கொடையான் கம்பன் றமிழினாற் கவிதை செய்தான்.
(இராமாவதாரப்பாயிரம்.)

இப்பாட்டில் 'உவச்சன்' என்பதற்கியைய, வாணியன் தாதன் என்பான் இக்கம்பரைப்பாடிய வசைப்பாட்டின்கண், "கைம்ம ணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்" (தமிழ் நாவலர் சரிதை) எனவருதல் காண்க. கைம்மணிச்சீர்-கையின்மணியோசை. உவச்சர் என்பார் காளிகோயில் முதலியவற்றிற் பூசைபுரியும் வகுப்பின ராதலால், அவர்க்குக் கையால் மணியொலிப்பித்தலுந் தொழிலாம்.

## இவர் வளர்ந்து கல்விபயின்று சிறந்தவாறு.

பெற்றுவளர்த்தும் வித்தைதனைப் பேணிக்கொடுத்தும் பெயர்கொடுத்தும்
பற்றவரும்பா லமுதளித்தும் பகைத்தவறுமைப் பயந்தீர்த்துங்
கற்றமுதனூற் றிருவழுந்தூர்க் கம்பன்றனையக் கருணைசெய்தோர்
மற்றும்புலவோ ரையும்வாழ வைத்தார்சோழ மண்டலமே.
(சோழமண்டல சதகம்.)

இங்ஙனம் கம்பனை வளர்த்துச் சிறப்பித்தவன், வெண்ணெய் நல்லூர்ச் சடையன் என்பான். இதனை மேல்வருஞ் செய்யுளானும் உணர்க.

### கம்பர், தெய்வவரத்தினாற் கவிசொல்லிய நாளிற் பாடிய வெண்பா.

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டி
லடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு
முடையான் சரராம னூர் (தமிழ் நாவலர் சரிதை.)

சரராமன் என்பது வெண்ணெய்நல்லூர்ச் சடையற்கு ஒரு பெயர். "மழையென், றுசங்கை கொண்ட கொடைமீளி யண்ணல்

---

* இவ்வரிய பாடம், இச்சங்கத்துக்குக் கிடைத்த மிகப்பழையவாகிய பாலகாண்டஏடுகள் பலவற்றிற்கண்டது. இப்பிரதிகளில் இக்காலத்து வழங்காத சில இனிய பாயிரச் செய்யுட்களும் உள்ளன.

† 'தாரணி கொண்டான்' எனவும் பாடம்,

சரராமன் வெண்ணை" (நாகபாசப்படலம்) என இவர் இராமாவதார த்து வழங்குதலானு முணர்க.

### இவர் ஏரெழுபதுபாடி அரங்கேற்றியது.

குணங்கொள்சடையன் புதுச்சேரிக் கொடையன்சேதி ராயன்முதற்
கணங்கொள்பெரியோர் பலர்கூடிக் கம்பநாடன் களிகூற
விணங்கும்பரிசி லீந்துபுவி யேழும்புகழே ரெழுபதெனு
மணங்கொள்பெருங்காப் பியப்பனுவல் வகுத்தார்சோழ மண்டலமே.
(சோழமண்டலசதகம்)

சடையனுகிய புதுச்சேரிக்கொடையன் என்க. சேதிராயனுக்கும் புதுவைஊராதல்பற்றிப்புதுச்சேரிக்கொடையனுகியசேதிராயன் எனினுமமையும். சடையன், சேதிராயன் முதலிய பெரியோர்நிறைந்த அவையிற்ருன் இவர் ஏரெழுபது அரங்கேற்றியது.

இப்பாட்டின்கண் 'குணங்கொள்சடையன்' எனப்பட்டவன், மேற்கூறிய வெண்ணைச்சரராமனவன். புதுவை, புதுச்சேரி என வழங்குகின்ற ஊரும் இவனதாதல்பற்றி இவனையே 'புதுச்சேரிக் கொடையன்' எனவும், 'புதுவைச்சடையன்' எனவும் வழங்குபவெனத் தெரிகின்றது. இவனைப்'புதுவைத்திரிகர்த்தன்' 'வெண்ணைத் திரிகர்த்தன்' எனவழங்குதலுமுண்டு. இவன், மூவேந்தர்க்கும் அவர் பரிசனங்கட்கும் ஒருகாற் பெருவிருந்தளித்து, அவரால் திரிகர்த்தராயன் எனச் சிறப்புப்பெயர் சூட்டப்பெற்ருன் என்பர். இவன் சோணுட்டில் மிகப்பெரியகாணிவளமுடையனுயிருந்தனனெனவும், நாளும்பல்லாயிரவர்க்குப் பாலுஞ்சோறும் பரிந்தளித்தனனெனவும், சிங்களமாண்ட பரராசசிங்கப்பெருமான் என்னுமரசன், ஈழநாடு பஞ்சம்பட்டபோது இவ்வள்ளலைப்பாட, இவன் ஆயிரங்கப்பலில் நெல் நிறைத்துக் கொடுபோய்க்கொடுத்து அவன் நாடுமுற்றும் பாதுகாத்துச் சிறந்தனனெனவும் சொல்லுப. இவன் சங்கரன் என்பவற்குப் புதல்வனென்பதும், இணையாரமார்பன் என்பவனைத் தம்பியாகவுடையவனென்பதும், பெரும்பாலும் திருவெண்ணெய்நல்லூரையே தனது பெருங்குடிக்கிருக்கையாகக்கொண்டவனென்பதும், கல்வியிற்சிறந்தானென்பதும் தெரிகின்றன. சிறுபான்மை, இவனைப் புதுவைச் சடையன் எனவழங்குவது, அதன்கண், இவன் தந்தையாகிய சங்க

ரன் வதிந்த சிறப்புப்பற்றியும், அவ்வூர் இவனுக்குச் சிறந்த கடற்றுறைப்பட்டினமாதல் பற்றியும் ஆகும். இவன் வியலூர் என்னுமிடத்துமிருந்தனனென்ப. புதுவையும் வெண்ணையும் வியலூரும் தூரவூர்களல்லாமை உணர்ந்துகொள்க. இவன் தந்தையாகிய சங்கரனுக்கு ஒட்டக்கூத்தர் முதலில்உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனரெனவும், அவரை, அப்புதுவைக்கணிருந்த காங்கேயன் என்னும் உபகாரியொருவன் கல்விபயிலுவித்து நல்லறிஞராக்கிக் கவிராக்ஷதன் எனவும், கௌடப்புலவன் எனவும் பெயர்சிறப்பித்து உயரச்செய்தனனெனவும், அந்நன்றிபாராட்டி அக்கூத்தர், காங்கேயன்மேல் 'நாலாயிரக்கோவை' யொன்று பாடினரெனவும் அறியலாவன. கௌடம் என்பது ஒருவகைக் கவிமார்க்கம். அது, பொருள்புலப்படத் தொடுப்பதினும் சொல்வளம்படத் தொடுப்பதே சிறப்பெனக்கருதுவதாம். 'இடுக்கட்புண்படு' 'பத்துக்கொண்டன' 'விக்காவுக்கு' என்பன முதலாகவரும் இக்கூத்தர்பாடல்கள் அக்கௌடநெறியே சென்றனவாதலுணர்க. ஒட்டக்கூத்தர், சடையன்றந்தையாகிய சங்கரனுக்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தனரெனவும், கம்பர் இச்சடையனால் வளர்த்துச் சிறப்பிக்கப்பட்டனரெனவும் தெரிதலால், கம்பர் கூத்தருக்கு இளையராவரென உய்த்துணரப்படுகின்றது. மற்றுமிச்சடையனைப்பற்றியன ஆங்காங்குக் கூறப்படும்: பின்னர்க் கண்டுகொள்க.

இனி, புதுவைச்சடையனும், வெண்ணைச்சடையனும் வேறுவேறுவரெனக்கூறின், இருவரும் 'திரிகர்த்தன்' எனச் சிறப்புப்பெயர் புனையப்பெற்றனரெனவும், இருவரும் நாளும்பல்லாயிரவர்க்குப் பசியாற்றும் வண்மையும் வளப்பமுமுடையராயிருந்தனரெனவும், அவ்விருவரும் கல்வியிற் பெரிய கம்பரைப் போற்றினரெனவும், "புதுவைச்சடையனிருந்த வியலூர்" என்று பாடப்பெற்ற வியலூர் வெண்ணெய்நல்லூர்க்கு மிக அணித்தாதலால், அவ்விருவரும் நெருங்கி வதிந்தனரெனவும் கொள்ளநேரும். அங்ஙனம் திரிகர்த்தனென்னும்பட்டம்அக்காலத்துஇருவர்க்குச்சூட்டியமை அறியப்படாமையானும்,புதுவையானொருவனே திரிகர்த்தனெனப்பட்டம்பெற்றானாக வெண்ணைத்திரிகர்த்தன் எனவும் வழங்குதலறியப்படுதலானும், திரி

கர்த்தனென்னுஞ் சிறப்புடையானொருவனே வெண்ணையும் புதுவையுமுடையனாயினான் எனக்கருதுதலே இயைபுடைத்தாமென்பது உணரத்தக்கது. அன்றியும், ஊரன்றி மற்றைவளமுங் குணமும் வண்மையும் பெயரும், கம்பராற் புகழப்படுஞ் சீருஞ்சிறப்புமென்னுமிவற்றில் எவ்வகைவேற்றுமையும் அறியப்படாமைகாண்க. இவற்றுக்கெல்லாம் செய்யுள் வருமாறு:—

அளிக்கும்படைமூ வேந்தருங்கொண் டாடும்விருந்தா லதிசயமாய்த்
திளைக்குந் திரிகர்த் தநாயனெனச் செப்பும்வரிசைத் திறஞ்சேர்ந்தோன்
விளைக்குமரிசி மாற்றியநீர் வெள்ளங்கிழக்கு விளையுமென
வளைக்கும் பெருமைப் புதுவையர்கோன் வளஞ்சேர்சோழமண்டலமே.
(சோழமண்டல சதகம்.)

[மேற்கோள்]

புரந்தர தாரு புதுவைச் சடையன்
னிருந்தவிய லூர்தெற்கு மேற்கு—பரந்தபொன்னி
யாற்றுநீ ரால்விளையு மப்பாற் கிழக்கரிசி
மாற்றுநீ ரால்விளையு மாம். (க)

யாமார் புகழ வியற்கம்ப நாட னிராமரொடும்
பாமாலை சூட்டுங் குலமுடை யானைப் படிபுரக்கக்
கோமாற னிட்டபொற் சிங்கா தனம்பெற்ற கொற்றவனைத்
தேமாலை யச்சந் தவிர்ப்பான்வெண் ணைத்திரி கர்த்தனையே. (உ)

தண்ணார் கமலச் சதுமுகத் தோனையுந் தப்புவதோ
பண்ணா மணித்தலைக் கட்செவி யானது பாரிலுள்ளே
கண்ணாக வாழும்வெண் ணைத்திரி கர்த்தன் கலைத்தமிழ்கேட்
டெண்ணா முடியசைத் தாலுல கேழு மிறக்குமன்றே. (௩)

எட்டுத்திசையும் பரந்தநிலா வெறிக்குங்கீர்த்தி யேருழவர்
சட்டப்படுஞ்சீர்வெண்ணெய்நல்லூர்ச்சடையன்கெடிலன்சரிதமெலா
மொட்டிப்புகழ வாயிரநா வுடையார்க்கன்றி யொருநாவின்
மட்டுப்படுமோ வவன்காணி வளஞ்சேர் சோழமண்டலமே.
(சோழமண்டலசதகம்)

தேனார்தொடையார் பராச சிங்கப்பெருமான் செழுந்தமிழ்க்குக்
கானார்நெல்லின் மலைகோடி கண்டிநாடு கரைசேரக்
கூனார்கப்ப லாயிரத்திற் கொடுபோயளித்த கொடைத்தடக்கை
மானாகரன் சங்கரன்சடையன் வளஞ்சேர்சோழ மண்டலமே.
(சோழமண்டலசதகம்)

[மேற்கோள்]

இரவுநண்பக லாகிலென்பக லிருளாகிவிர வாகிலெ
ணிரவியெண்டிசை மாறிலென்கட லேழுமேறிலென் வற்றிலென்
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர்போகிலெ ளுகிலென்
வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கைகாரண மாகவே
கருதுசெம்பொனி னம்பலத்திலோர் கடவுணின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகி றுயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன்
சங்கரன்றரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே.

இது பரராசசிங்கப்பெருமான் சடையனுக்கு எழுதிவிடுத்த செய்யுளாயினுமாம்.

**கம்பர் காவிரி எச்சிற்படப்பாடிய வெண்பா.**

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் றன்புகழை
யார்போற்ற வல்லா ரறிந்து. **(தமிழ்நாவலர் சரிதை)**

விருந்துநுகர்வோர் கைகழுவ விளங்கும்புனற்கா விரியென்றார்
தருந்தாயனைய புகழ்ப்புதுவைச் சடையன்கொடையார் சாற்றவல்லார்
பரிந்தாரெவர்க்கு மெப்போதும் பாலுஞ்சோறும் பசிதீர
வருந்தாதளிக்க வல்லதன்றோ வளஞ்சேர்சோழ மண்டலமே.

**(சோழமண்டலசதகம்)**

இவற்றால் இவன் நாளும்பல்லாயிரவர்க்குணவளித்ததுணரப்படும்.

கோலாகலமன் னரிலவன்போற் கொடுத்தேபுகழுங் கொண்டாரார்
மேலார்கவுடப் புலவனெனும் விழுப்பேர்க்கூத்தன் முழுப்போ
னுலாயிரக்கோ வையும்புனைய நவில்கென் றிசைத்து நாட்டுபுகழ்
மாலாமெனுங்காங் கயன்வாழ்வு வளஞ்சேர் சோழமண்டலமே.

**(சோழமண்டலசதகம்)**

[மேற்கோள்]

புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களி றுகைக்குங் கவிரா க்ஷதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் கலநாள் வியந்துகாங் கயன்மேற்
கூறுநாலாயிரக்கோவைகொண் டயர்ந்தோன்.

இனிச் சேதிராயனென்பான் புதுவையின்கணிருந்தஓருபகாரி: இவன் 'கம்பர் வேளாளரைச் சிறப்பித்துப்பாடிய ஏரெழுபது' என்னும்நூலைச் சடையனுடனிருந்து கேட்டவன். கம்பர் ஏரெழுபது அரங்கேற்றும்போது இச்சேதிராயனை விடந்தீண்டிற்றாகவும் அதனாலரங்கேற்றம் இடையறவுபடலாகாது என்னுங்கருத்தாற் சேதிராயன் தனக்கு நிகழ்ந்ததனைப் பிறர்க்குரையாது மறைத்து அவ்வவையத்திருந்து நூல்கேட்க, விடந்தலைக்கேறுதலால் மயங்கி வீழ்ந்தனன். அவ்வளவில் ஆங்குக்கூடிய பெரியார் பலரும் உடற்குறியால் விடமென்றுகண்டு வருந்தாநிற்கையிற் கம்பர் தமதருமைத்தெய்வவாக்கினாற் சிலவெண்பாக்கள்பாடி விடத்தையேறியபண்பே யிறக்கி அவனை உயிர்ப்பித்தார் என்ப. இச்சேதிராயனுக்குத் தொண்டைநாட்டிலுங் காணிவளமுண்டு. இவற்றிற்குச் செய்யுள்:—

அழுவதுங் கோண்டு புலம்பாது நஞ்சுண் டதுமறைத்தே
ரெழுபதுங் கோண்டு புகழ்க்கம்ப வாணனெழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட தாற்றொண்டை மண்டலமே.
(தொண்டைமண்டலசதகம்)

" ......................... ...பாவலர்தா
மேரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை." (திருக்கைவழக்கம்)

### கம்பர் ஏரெழுபதுபாடி யரங்கேற்றும்போது புதுவைச் சேதிராயனை விடந்தீண்டத் தீர்த்தவெண்பா.

ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட.

மங்கை யொருபாகர் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
யேறிய பண்பே யிறங்கு. (தமிழ்நாவலர்சரிதை)

### இவர் சோழன்பாற் சிறப்பெய்தியது.

கம்பரது கல்வியுங் காட்சியுமே காசினிமுற்றும் மேம்படுத்துப் புகழ்ந்து பாராட்டுதலைச் சோழன்றெரிந்து அவரைத் தன்பாலழைப்

பித்து, தான் கேள்வியுற்றதினும் இவர் ஆயிரம்பங்கு அதிகமாகப் பல்லாற்றானுஞ் சிறத்தலைக் கண்கூடாகக்கண்டு, அரசர்க்கொத்த வரிசைபலவளித்து கவிச்சக்கரவர்த்தியெனப் பட்டந்தந்து, அவ்வரிசைக்கும் பெயர்க்குந்தக நாடொன்றுநல்கித் தானல்கிய அந்நாட்டிற்கும் கம்பனாடு எனப் பெயர்வழங்குவித்து, இவரைப்பெரிதும் உயர்த்தினன். இவர், அக்காலத்துக் காவிரி கரைகடக்குமளவிற் பொங்கிப் பெருகியதாக, அதன் பெருக்கடங்கப் பாடி, தம் தெய்வவாக்கின் பெருமை பலர்க்கும் புலப்படுத்தினரென்ப. இவரிங்ஙனம் சிறந்து வாழும்போது, சோழன், தாதன் எனப் பெயரியசெக்கான் ஒருவன் தமிழ்ப்புலமையுடையனாய்த் தன்அவைக்களத்தெய்திப் பாடினானுக்கு ஊரும் பேருமளித்துக் காளமுதலிய விருதுகளுநல்கியவளவிற், கம்பர்அரசனைநோக்கி, இவ்வாணியற்குஇத்தகைவரிசையளித்துயர்த்தல் எம்போன்றகுலக்கவிகளைச் சிறுமைப்படுத்தலோடொக்குமென்றுரைத்துப், புலவர்களைவரிசையானோக்கவும் அவர்கண்மாட்டுப் பொதுநோக்கொழியவும் வேண்டினர்எனவும், இதனைத் தாதன் கண்டு பொறானாய், அச்சோழன்முன்னே, இவர் பாடிய மும்மணிக்கோவை என்னும் ஓர்நூலிற்குக் குற்றங்கூறி இவரையுமிழித்துக் கவிபாடினன் எனவுங்கூறுப. தாதன் சோழன்பாற் பெற்ற ஊர் தொண்டைநாட்டின்கண்ணுள்ள கூவமென்பதாகும். கம்பர் ஒருகால் தொண்டைநாடு செல்லும்போது அத்தாதனுக்கு அடிமைப்பட்ட கூவத்தூர்வழியே சிவிகையிற் சென்றாராக, அவ்வூரார் அதுதெரிந்தெய்தித் தங்களைப்பாடுமாறு கம்பரை இறைஞ்சிவேண்ட, அதற்குக் கம்பர் தாதனுக்கு அடிமைப்பட்ட அவ்வூரைத் தாம்பாடுவதில்லையென்னக்கேட்டு அவ்வூரார், அம்மட்டிலொழியாராய்க் கம்பர் சிவிகையை நெடுந்தூரஞ்சுமந்து அடைப்பையிட்டு வழிபட்டுநின்றதற்கு உவந்து அவர்களைப்பாடினரென்ப. இவர் பெற்றசெல்வமெல்லாம் பிறர்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மையுடையரெனவுஞ் சொல்லுப. இவர்காலத்துச் சோழனிவன் என்பது மேலிவர்காலம் கூறும்வழிக்காண்க.

**கம்பர் காவிரி பெருக்கடங்கப் பாடியது.**

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென்—றிந்நீ

ருரை கிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண். (தமிழ் நாவலர் சரிதை)

கன்னி என்பது குமரியாறு. அதனை முன்னரே கடல்கொண்டதாகலின் 'அழிந்தனள்' என்றார். 'கங்கை திறம்பினள்' என்பது வானுகியமேனிலேயிருந்தவள், பாதலம் வரைசென்றிழிந்தன ளாதலிற் கங்கை மாறுபட்டனள் என்றவாறு.

**கம்பர் வாணியன்தாதன் விருதுகாளம்பிடிக்கப் பாடியது.**

கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பாணங் குலக்கவிக்குக்
காளம் பிடித்திடிற் சின்னம் படுமன்னர் காதலிமார்
வேளம் பிடித்தகண் வெள்ளம் பிடிக்கவெம் பேய்க்கிளம்பேய்
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே.
(தமிழ்நாவலர் சரிதை)

**தாதன் பாடிய வசை.**

கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனை வாளெயிற்றுப்
பைம்மணித் துத்திக் கனமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் கண்பிதுங் கப்பதம் பேர்த்த செயதுங்கனே. (ஷை)

பேணிய செந்தமிழ்த் தாதனுக் கேயன்பு பெற்றமையா
ணுணிய கம்பன் சிவிகையுந் தாங்கி நயந்ததமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப் பிலாது புகுந்துபின்னும்
வாணியன் தாதற்குத் தாதா னதுந்தொண்டை மண்டலமே.
(தொண்டைமண்டல சதகம்)

[மேற்கோள்]

ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனு
னுங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்சொல்ல
வாங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பையிட்டுத்
தாங்கவி கொண்டதுங் கூவந் தியாக சமுத்திரமே.

இனி, 'கம்பநாடுடையவள்ளல்' 'காரணி கொடையான் கம்பன்' (இராமாவதாரப்பாயிரம்) "மன்றே புகழுந் திருவழுந்தூர் வள்ளல்' (சடகோபரந்தாதி) எனவருதலான் இவர் வள்ளன்மை யுணரலாகும்: ஈண்டுக் கூறியன இவரது கல்விவண்மையா மென்பாருமுளர்; இருவகை வண்மையுமுடையா ரென்றல் பொருந்துமென்க.

## இவர் வல்லியை விழைந்தது.

இவர் ஒருகாற் றொண்டைநாட்டுள்ள திருவொற்றியூருக்குச் சென்றபோது, அங்குச் சதுராননபண்டிதன் மடத்திருந்த வல்லி எனப்பெயரிய கணிகையொருத்தியை விழைந்து, பலகாலம் அவளுடன் அங்கேதங்கிமகிழ்ந்து அவளுக்கு எருமைகள்வாங்கிவரப் புழற்கோட்டம்புக்குக் காளிம்பன் என்னும் நிரைமேய்ப்பானொருவனைக் கண்டு பாட, அவன் ஈன்ற எருமைகள் ஆயிரம் (பல) கொடுக்கப்பெற்று, அவற்றையெல்லாம் வல்லிபாலுய்த்துப், பின் அவளுக்கு அணி பலவியற்றித்தருதற்குத் திருமயிலைபோய் ஆண்டுத்திருவாலி என்னும் தட்டான் ஒருவனைப்பாடி அணியெலாம் இயற்றுவித்துக்கொண்டு மீண்டு அவளுக்கு அணிந்து, இன்னவாறு அவளுக்கு வேண்டுவன பலவும் உதவிவந்தனர். அவள் இவர்பாற் பாராட்டிய பேரன்பினாற் பின் அவளைப் பிரியலாற்றாது உடன்கொண்டு சோணாடுபுக்கு ஆங்கும் அவளுடன் இனிது களித்தனர் என்ப. அக்காலத்து ஆங்கு வல்லியிருந்த வீட்டினை மழையால் நனையாமற், கம்பருக்கு ஆருயிர்த்துணைவனான சடையவள்ளல் ஓரிரவிற்குள் நெற்கதிராலே வேய்ந்து இனிது புரிந்தனன் என்ப. இவற்றிற்குச் செய்யுள் வருமாறு;—

**கம்பர் திருவோற்றியூர் வல்லியைக்கண்டு சோல்லியது.**

இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம்
பல்லென்று செவ்வாம்பன் முல்லையையும் பாரித்துக்
கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ்
நில்லென்று போனாரென் னெஞ்சைவிட்டுப் போகாரே.

(தமிழ்நாவலர்சரிதை.)

**இதுவுமது.**

நடக்கி லன்னமா நிற்கினல் வஞ்சியாங்
கிடக்கி லோவியப் பாவை கிடந்ததாங்
தடக்கை யான்சது ரானன பண்டிதன்
மடத்து ளாளென் மனத்துறை வல்லியே. (ஷை)

**கம்பர் வல்லிவீட்டுக்கு எருமை வாங்கிவரப்போய்க்காளிம்பன் நிரைமேய்ப்பானைக்கண்டு அவன்பேரிற் பாட அவன் ஈன்ற எருமை ஆயிரம் கோடுத்த வேண்பா.**

புக்கு விடைதழுவிக் கோடழித புண்ணெல்லாந்
திக்கிலுயர் காளிம்பன் றென்புழன்மா—னக்கணமே

தோள்வேது கொண்டிலனேற் சுந்தரப்பொற் றோன்றலுக்கு
வாழ்வேது கண்டிலமே மற்று. (தமிழ் நாவலர் சரிதை.)

கம்பர் மயிலாப்பூரிற்போய்த் தட்டான் திருவாலிமேற் பாடிய வெண்பா.

அண்ணறிரு வாலி யணிமயிலை யத்தனையும்
வெண்ணிலவின் சோதி விரித்ததே—நண்ணுந்
தடந்துப்பு விற்பாணந் தன்முகத்தே கொண்டு
நடந்துப்பு விற்பா ணகை. (ஷ)

தனதானியத்தி லுயர்ந்தோர்க டாமேயென்னுந் தருக்கேயோ
வினவாதிரவி னெற்கதிரான் வேய்ந்தார்வல்லி வீடதல்லாற்
கனிசேர்தமிழ்க்குப் பன்னிரண்டு கடகயானைக் காடளித்த
மனைவாழ்வுடையான்வெண்ணெய்நல்லூர்வாழ்வான்சோழமண்டலமே.
(சோழமண்டல சதகம்.)

[மேற்கோள்]

பொதுமாதர் வீட்டைப் புகழ்பெற வேநெற்
கதிரானே வேய்ந்தருளுங் கங்கைப்—பதிநேர்
வருவெண்ணை நாடன் வருநா வலர்க்குத்
தருவா னவன்சடையன் றான்.

கம்பர் குறம்பை என்னுந்தாதியைத் தழுவிச்சொல்லிய கலித்துறை.

சொல்லியைச் சொல்லி னமுதான செல்வியைச் சொற்கரும்பு
வில்லியை மோக விடாய்தவிர்ப் பாளை விழியம்பினாற்
கொல்லியைக் கொல்லியம் பாவையொப் பாளைக் குளிரொற்றியூர்
வல்லியைப் புல்லிய கைக்கோ விவர்வந்து வாய்த்ததுவே.
(தமிழ்நாவலர் சரிதை)

இப்பாட்டினு லிவர் வல்லியைப் பிரிந்தகாலத்துக் குரும்பை என்பாளைத்தழுவி மனம் பொருந்தாமையால் வெறுத்தனர் எனத் தெரிகின்றது. இவர் வல்லியைப் பிரிகின்றபோது பாடியதாக "வடிப் பாளை வீசுந் திருவொற்றியூர்வல்லி" என்னும் முதலையுடைய பாட் டொன்றும் வழங்குகின்றது. இவர்களையன்றிக் களந்தைப்பதியிலொ ருத்தியையும் இவர் விழைந்தனரென "வில்லிகளந்தைமின்னை" (தமிழ் நாவலர் சரிதை) என்னும் முதலையுடைய செய்யுளான் விளங் குகின்றது. இப்புலமைக்காசரது அறிவுவீற்றிருந்த செறிவுடை மனத்தையும் இவ்வாறு அலைக்கவல்ல காமனே யாரினும் பெருவலி

யுடையன் என்பது ஒருதலை. 'எவர்க்கும் வேள்கணை தீர்திறமின்று' என்பரன்றே. இவ்விழைவெலாமுட்கொண்டுபோலும் இப்புலவர் பெருந்தகையார் "கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்கலாமோ" (மாரீசன்வதை) எனப்பாடியதூஉம்.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்,

**ரா. இராகவையங்கார்,**

பத்திராசிரியர்.

---

உ

# தோல்வித்தானம்.

தோல்வித்தானமாவது யாதேனும் ஒரு விஷயத்திலே ஒருவர் கொள்கைக்கு மற்றொருவர் கொள்கை மாறுபட்டுழி மெய்யுணர்வு கைவருதல்காரணமாக நியாயசபையிலே வாதியும், பிரதிவாதியுமாகி நின்று பிரமாணாதிகளோடும் வாதிக்குந் தருக்கவாதத்திலே தடுமாறிக் கூறுதலினாலாவது வேறொன்றாகக் கூறுதலினாலாவது ஒருவர் தோல்விக்கிடனாதலேயாம். "வாதம் பேசுவார் தோல்வியுறுதற் கேதுவே தோல்வித்தானம்" என்பது தருக்கசங்கிரகதீபிகை. தோல்வித்தானத்தினை வடநூலார் நிக்கிரகத்தானம் என்பர். நிக்கிரகம்-தோல்வி, தள்ளுதல். தானம் - இடம், இருக்கை. வாதி - தன்பக்ஷத்தை முதலெடுத்துக்கூறுவோன். பிரதிவாதி - வாதிகூற்றுக்களை மறுத்துரைப்போன்.

தோல்வித்தானம் இருபத்திரண்டு வகைப்படும் என்று சில தருக்கநூல்களுஞ் சிவஞானசித்தியும் கூறும். "காண்டுந் தோல்வித்தானமிரண்டிருபத்திரண்டாம்" என்பது சிவஞானசித்தி. தோல்வித்தானங்கள் இருபத்திரண்டும் சிவஞானசித்தி யுரைகளுள்ளே மறைஞானசம்பந்தர், சிவாக்கிரயோகியர், சிவஞானமுநிவர், நிரம்பவழகியதேசிகர் என்னும் நால்வரும்செய்தஉரைகளிலும்,கௌதமருடைய

நியாயசூத்திரவுரையிலும், தருக்கசங்கிரகதீபிகையின் உரையாகிய நீலகண்டீயத்திலும் விரித்துக்கூறப்பட்டிருக்கின்றன. நியாயசூத்திரத்திலே கூறப்பட்டுள்ள பதினாறு பதார்த்தங்களுள்ளே தோல்வித்தானமும் ஒன்று; அதுவே இறுதியிற் கூறப்பட்டுள்ளது. தருக்கசங்கிரகதீபிகையிலும் உத்தேசமாத்திரையாகக் கூறப்பட்டிருக்கின்றன. தருக்க பரிபாடையிலுஞ் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. பிரபாகரம், பாட்டம் முதலிய நூல்களிலே விரித்துக்கூறப்பட்டிருக்கின்றன என்பது சில நூலுரைகளால் விளங்குகின்றது.

தோல்வித்தானங்கள் இருபத்திரண்டினுள்ளே சிலசிலவற்றிலே மேற்சொல்லப்பட்ட சிவஞானசித்தியுரைகாரர்களும் தம்முள்ளே மாறுடுவர். அவர்களுரைகளோடு நியாயசூத்திரவுரையும், நீலகண்டீயமும் மாறுடும். ஆயினும் இவைகளுள்ளே நம்மறிவிற்குப் புலப்பட்டவைகளையே பெரும்பாலும் அநுசரித்துத் தோல்வித்தானங்கள் இருபத்திரண்டும் இங்கே எழுதப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| க. | பிரதிஞ்ஞாஹானி | கஉ. | அதிகம் |
| உ. | பிரதிஞ்ஞாந்தரம் | கங. | புநருத்தம் |
| ங. | பிரதிஞ்ஞாவிரோதம் | கச. | அநநுபாடணம் |
| ச. | பிரதிஞ்ஞாசந்நியாசம் | கரு. | அஞ்ஞானம் |
| ரு. | ஏத்துவந்தரம் | கசா. | அப்பிரதிபை |
| சா. | அர்த்தாந்தரம் | கஎ. | விக்ஷேபம் |
| எ. | நிரர்த்தகம் | கஅ. | மதாநுஞ்ஞை |
| அ. | அவிஞ்ஞாதார்த்தம் | கசு. | பரியநுயோச்சியோபேக்ஷணம் |
| கூ. | அபார்த்தகம் | உ0. | நிரநுயோச்சியாநுயோகம் |
| க0. | அப்பிராத்தகாலம் | உக. | அபசித்தாந்தம் |
| கக. | நியூநம். | உஉ. | ஏத்துவாபாசம். |

## க. பிரதிஞ்ஞாஹானி:—

பிரதிஞ்ஞாஹானியாவது பிரமாணம் முதலியவைகளாலே சாதிக்கத்தக்கதென்று தன்னால் விரும்பிச்சொல்லப்பட்ட பொருளைச் சாதித்து முடியாது அப்பொருட்குக் கேடுறுமாறு பேசுதல். பிரதிஞ்ஞாஹானி என்பதற்குப் பிரதிவாதி கூற்றுக்களை அங்கீகரித்துக் கொண்டு தன்கொள்கைகளை விடுதலென்பாருமுளர். பிரதிஞ்ஞா -

உடன்பட்டுக் கூறப்பட்ட பொருளையுடைய வாக்கியம், மேற்கோள். ஹாநி - கேடு, அழிவு, விடுதல்.

உ. பிரதிஞ்ஞாந்தரம்:—

பிரதிஞ்ஞாந்தரமாவது தன்னாலே முன்னர்க்கூறப்பட்ட பிரதிஞ்ஞை பிரதிவாதியாலே மறுத்துரைக்கப்பட்டுழி அதனைச் சாதிக்காமல் வேறொரு பிரதிஞ்லைஞயைக்கூறுதல். பிரதிஞ்ஞை - மேற்கோள். அந்தரம் - வேறு.

௩. பிரதிஞ்ஞாவிரோதம்:—

பிரதிஞ்ஞாவிரோதமாவது தன்னாலே சொல்லப்பட்ட மேற்கோளுக்குச் சம்பந்தமில்லாத வேறோரேதுவினைக் கூறுதல். பிரதிஞ்ஞா - மேற்கோள். விரோதம் - மாறுபாடு.

ச. பிரதிஞ்ஞாசந்நியாசம்:—

பிரதிஞ்ஞாசந்நியாசமாவது தன்னாலே கூறப்பட்ட மேற்கோள் பிரதிவாதியாலே மறுக்கப்பட்டுழி அதனை முற்றும் விட்டுவிடுதல். பிரதிஞ்ஞா - மேற்கோள். சந்நியாசம் - முற்றவிடுதல்.

ரு. ஏத்துவந்தரம்:—

ஏத்துவந்தரமாவது தன்னாற்சொல்லப்பட்ட பிரதிஞ்ஞையின் ஏது பிரதிவாதியாலே மறுக்கப்பட்டுழி வேறோர் ஏதுவினைக்கூறுதல். ஏது - காரணம். அந்தரம் - வேறு. இதனை ஏத்துவபரம் எனவும் கூறுவர்.

சூ. அர்த்தாந்தரம்:—

அர்த்தாந்தரமாவது தன்பால்வருந் தோல்வியை மறைக்கக் கருதி முன்னர்ச்சொன்ன பொருட்கு உபயோகமில்லாத வேறுபொருள்களைக் கூறுதல். அர்த்தம் - பொருள். அந்தரம் - வேறு.

எ. நிரர்த்தகம்:—

நிரர்த்தகம் பிரதிவாதி யாதும் பேசானாகவுந் தான் வீண்வார்த்தைகளைப்பேசுதல். நிரர்த்தகம் - பயனில்வார்த்தை. நிர் - இன்மை. அர்த்தகம் - பொருளுடையது.

அ. அவிஞ்ஞாதார்த்தம்:—

அவிஞ்ஞாதார்த்தமாவது சபையாரும், பிரதிவாதியும் அறிந்து கொள்ளற்கரிய பொருளுடைய சொற்களை எடுத்துக்கொண்டு பேசுதல். அவிஞ்ஞாத - அறியப்படாத. அர்த்தம் - பொருள்.

கூ. அபார்த்தகம்:—

அபார்த்தகமாவது யாதேனும் ஒருபொருளும் இல்லதாக ஒன்றோடொன்று அவாவிப் பொருந்துதலில்லாத சொற்களைத் தொடுத்துக்கூறுதல். அவாய்நிலை முதலியன இல்லனவாகப் பேசுதல் என்பாருமுளர். அப - நீங்கிய. அர்த்தகம் - பொருளுடையது. அபார்த்தகம் என்பதனைப் பொருட்போலி என்று மொழிபெயர்ப்பாருமுளர்.

கo. அப்பிராத்தகாலம்:—

அப்பிராத்தகாலமாவது மேற்கோள், ஏது முதலியனவெல்லாம் முறைதவறி முன்பின்னாக நிற்குமாறு பேசுதல். அப்பிராப்த - அடையப்படாத; காலம்.

கக. நியூநம்:—

நியூநமாவது தன்னாற்சொல்லப்பட்ட பிரதிஞ்ஞையை நிலைபெறுத்தும் உறுப்புக்களை முற்றக்கூறாது சிலவுறுப்புக்கள் குறைவுபடக் கூறுதல். நியூநம் - குறைவு, குன்றக்கூறல்.

கஉ. அதிகம்:—

அதிகமாவது இயைபும் உபயோகமும்பற்றி ஏது முதலிய உறுப்புக்களை அதிகமாகக் கூறுதல். அதிகம் - மிகை, மிகைபடக்கூறுதல்.

கங. புநருத்தம்:—

புநருத்தமாவது அநுவாதமின்றி முன்சொன்ன சொல்லினையாவது பொருளினையாவது பின்னுங்கூறுதல். புநருத்தம் - கூறியது கூறல். புந:—பின்னர். உக்தம் - சொல்லுதல். அநுவாதமாயின், புநருத்தம் குற்றமாகாது.

கச. அநநுபாடணம்;—

அநநுபாடணமாவது வாதியினாலுஞ் சபையாராலுஞ் சொல்லப்பட்ட வாக்கியத்தை மறுக்கும்போது பின்னர் எடுத்துக்கூறுதலா

கிய அநுவதித்தலைச் செய்ய இயலாமை. அநநுபாடணம் - வழிமொழியமாட்டாமை. அந் - இன்மை. அநுபாடணம் - வழிமொழிதல். அநு - பின். பாடணம் - சொல்லுதல்.

## கரு. அஞ்ஞானம்:—

அஞ்ஞானமாவது சொல்லப்படும் வாக்கியம் மூன்றுமுறை சொல்லப்பட்டுச் சபையாராலே பொருளறியப்பட்டும் அதன்பொருளை அறியமாட்டாமை. அஞ்ஞானம் - அறியாமை. அ - இன்மை. ஞாநம் - அறிதல்.

## கசு. அப்பிரதிபை:—

அப்பிரதிபையாவது வாதியாலே சொல்லப்பட்டது உத்தரங்கூறுதற் கேற்றதென்றறிந்தும் உத்தரங்கூறுது கடவுளைத்தியானித்தல், வேறொன்றுபடித்தல், மேலேபார்த்தல் முதலியன செய்து புத்தியின்மையைக்காட்டுதல். அப்பிரதிபை - புத்தியின்மை. அ - இன்மை. பிரதிபை - புத்தி, காலத்துக்கேற்ற அறிவு. அப்பிரதிபை என்பதனை அப்பிரதீரூபகதை என்பாருமுளர்.

## கஎ. விக்ஷேபம்.

விக்ஷேபமாவது நியாயசபையிலே வாதமாரம்பித்த பின்னும் வாதியாவது பிரதிவாதியாவது மத்தியஸ்தர் முதலினோரில்லை என்று சொல்லி எடுத்த விஷயத்தைத் தூரவிடுத்துக் காலங்கழித்தல். விக்ஷேபம் - தூரவிடுத்தல்.

## கஅ. மதாநுஞ்ஞை:—

மதாநுஞ்ஞையாவது தான் கூறியவைகளிலே பிரதிவாதி ஏற்றிய குற்றங்களை மறுத்துரையாது உடம்பட்டு, பிரதிவாதிக்கு வெறுப்புண்டாக்க எண்ணி இட்டமுள்ளவைகளைக்கூறுதல். மத — அறியப்பட்ட. அநுஞ்ஞை - சம்மதி.

## கக. பரியநுயோச்சியோபேக்ஷணம்:—

பரியநுயோச்சியோபேக்ஷணமாவது மறுத்துரைத்தற்குத் தக்கதாகப் பிரதிவாதி கூறிய வாக்கியந் தோன்றுதலை அறிந்தாவது அறியாமலாவது மறுத்துரையாதுவிடுதல். பரியநுயோச்சியம் - உடன்படற்குரியது. உபேக்ஷணம் - விருப்பின்மை.

## ௨௦. நிரநுயோச்சியாநுயோகம் :—

நிரநுயோச்சியாநுயோகமாவது தோல்வித்தானமடையாதவனை அடைந்தனையென்று தோல்வித்தானங் கூறுதல். நிரநுயோச்சியம் - உடன்படாமைக்குரியது. அநுயோகம் - சொல்லற்கியைந்தது.

## ௨௧. அபசித்தாந்தம்.

அபசித்தாந்தமாவது யாதேனும் ஒரு சாத்திரசித்தாந்தத்தை அநுசரித்துப் பேசத்தொடங்கி அதனை மறந்து அந்தச் சித்தாந்தத்திற்குமாறுயுள்ள வேறொரு சித்தாந்தத்தினைப் பின் அநுசரித்துப்பேசிமுடித்தல். அப - விபரீதம். சித்தாந்தம் - முடிந்தமுடிபு. அபசித்தாந்தம் என்பதனைப் போலிச்சித்தாந்தம் என்பாருமுளர்.

## ஏத்துவாபாசம்.

ஏத்துவாபாசமாவது எடுத்துக்கொண்ட பிரதிஞ்ஞைக்கு இயைபில்லாத ஏதுக்களைக்கூறுதல். ஏது - காரணம். ஆபாசம்-போலி.

சொன்னசொல்லுத் தவறுதல், சொன்னதைச் சொல்லவில்லையெனல் முதலியனவாகச் சில தோல்வித்தானங்கள் சொல்வாருமுளர். நிற்க. தமிழ்ப்பாஷையிலும் சமயவாதம், இலக்கணவாதம், இலக்கியார்த்தவாதம், காலவாதம் முதலிய பலவகை வாதங்கள் நிகழ்கின்றன. அவ்வாதங்களை நிகழ்த்தும் வாதிப்பிரதிவாதிகள் யாவரும் இந்தத் தோல்வித்தானங்களையெல்லாம் நன்கறிந்துகொண்டு வாதத்திற் பிரவேசித்தல் அவர்க்குப்பெரிதும் வெற்றிபயப்பதாகும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்.
குரோதிஞு கார்த்திகைமீ

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# ஓரடித்தமிழ்ச்சொற்கள்.

பேண்—விருப்பமுணர்த்துமோருரிச்சொல்.

பிணை—ஆசை. குதிரைமுதலியவற்றின் பெண். "பிணையும்பேணும்பெட்பின்பொருள"—தொல்காப்பியம், உரிச்சொல்லியல், ௪௦.

பிணவு—நாய்முதலியவற்றின் பெண்.

பிணா—பெண்பொது.

பிணி—கட்டுதல்—நோய்.

பிணையல்—மாலை.

பிணைத்தல்—கட்டுதல்.

அறு—நீக்கு, நீங்கு, வரம்புசெய் என்னும் பொருள்தரும் வினையடி.

அறம்—பாவத்தினீக்கப்பட்டது—தருமம், ஒழுக்கம்.

அறல்—கருமணல்—கொழிக்கப்பட்டமணல். புனற்றிரை-நீங்குவது என்பது அதன்பொருள். சிறுதூறு-பெருந்தூற்றினீங்கியது.

அறன்கடை—பாவம்—அறத்தினீங்கியது.

அறுத்தல்—பிரித்தல்.

அறுப்பு—பிரித்தல்.

அறுகு—அறுக்குந்தோறும் வளர்வது—அறுகம்புல்.

அறவர்—பாவத்துக்கு வரம்புசெய்து கொண்டவர்—முனிவர்.

அறவு—அறம்—"அறவாழி" என்பதிற் காண்க.

அறுவை—நெடும்பாவாக நெய்து அறுக்கப்படுவது-சீலை, துணி என்பது மது.

அறை—வீட்டினுள் வகுக்கப்படுமிடம்; சிற்றில், அறுத்து—"மூக்கறை" "செவியறை"

அற்றம்—தனிமை. சமயம், பிறர்நீங்கிய சமயம்.

அறவி—அறத்தினையுடையது.

அறவன்—யாவற்றையு நீங்கினேன்—கடவுள், பாவத்தி னீங்கினேன்.

அற்றார்—நீங்கினார்.

அறவை—இனமில்லான்.

அறவையேன்—தமியேன்.
ஆறு—அறுத்தொழுகுதலையுடையது—நதி. ஒழுக்கம்.
ஆறல்—தணிதல்—நீங்குதல்.
ஆற்றுதல்—தணித்தல்—துயர்தீர்த்தல்.
ஆனல்—நீங்குதல்.

ஆள்—ஆளுதற் பொருள் தரும் வினையடி.

ஆடூஉ—ஆள்பவன்—ஆண்மகன்.
ஆடவன்—ஷை.
ஆட்டி—ஆளப்படுபவள்—பெண்.
ஆடல்—ஆளுதல்.
ஆளி—ஆள்பவன்.
ஆள்—ஆளப்படுபவன்—அடிமை.
ஆண்—ஆண்பால்.

குறு—சிறுமைப்பொருளுணர்த்தும் உரிச்சொல்.

குறுமை—சிறுமை.
குறை—சிறுமை.
குற்றம்—பிழை—சிறுமை.
குற்றல்—பறித்தல்—குறைத்தல்.
குற்றி—குறியது.
குறுகல்—குறைதல்.
குறத்தி—சிறுவாழ்வுடைய சாதிப்பெண்.
குறம்—சிறுவாழ்வுடைய சாதி
குறவன்—ஷை சாதி ஆண்.
குன்றம்—சிறுமலை.
குன்று—ஷை.
குறில்—குறுமையுடையது.
குறிச்சி—சிற்றூர்.
குறடு—சிறுதிண்ணை.
குறள்—சிறுமையுடையது.
குறளை—சிறுசொல்—குற்றச்சொல்.
குறி—அடையாளம்—சிறியபுள்ளி—அமிசம்.
குறுகுறு—சிற்றொலி.
குறும்பர்—குறுநிலமன்னர்.
குறும்பு—சிறுமை—சிற்றூர்.

குறும்பூழ்—சிறுபறவை—காடை.

குன்றல்—மெலிதல்.

கூறு—சிறுமைசெய்யப்பட்டது. பங்கு.

கூறை—பாவினின்றுங் குறைக்கப்பட்டது—சீலை.

கூற்று—நமன்—பிரிப்பவன், வாழ்நாளைக்குறைப்பவன்.

கூற்றுவன்—நமன்.

கூற்றன்—நமன்.

கூன்—சிறுமை.

குறளி—குறள்வடிவினதாகிய பேய், வசவி.

கூளி—குறளி என்பதன் மரூஉப்போலும்.

கோள்—குறள்—குற்றச்சொல். குறள் என்பதன்மரூஉப்போலும்

குறிஞ்சி—மலைசார்ந்த நிலம்—சிறுமையுடைய நிலம்.

கூ-கூஎன்னும்மொலிக்குறிப்பு. இதனடியாற்பிறந்த சொற்களாவன.

கூகை—கோட்டான்—கூகூசப்தமுடையது.

கூவல்—அழைத்தல்.

கூறு—சொல்லு—தூ தூறுஎன வந்தாற் போல் வந்தது.

கூற்றம்—சொல்.

கூறுதல்—விற்றல்—கூவிவிற்றல். இக்கருத்துப்பற்றியே பகர்தல் என்பதும் விற்றலுக்கு வந்ததாம்.

கூத்து—கூவி ஆடல்.

கூத்தன்—நாடகன்.

கூதை—கூகூவெனவூதுங் குளிர்காற்று.

கூதிர்—குளிர்காலம்.

கூப்பீடு—கூப்பிடல்—கூப்பீடுதூரம்.

கூப்பிடல்—கூவல்.

கூம்பல்—கூவென்னுஞ் சத்தமிடும்போது குவியும் இதழ்போலக் குவிதல்.

ஆ—ஆ என்னும் சத்தம்அடியாகப்பிறந்தசொற்கள்.

ஆகுலம்—ஆவென்னுஞ் சத்தகணம்—அது துன்பத்துக்கண்வருதலின் துன்பத்துக்குப் பெயராயிற்று.

ஆகுளி—ஒருபறை.

ஆரவாரம்—பேரொலி.

ஆர்த்தல்—ஒலித்தல்.

ஆர்ப்பு—பேரொலி.

ஆலல்—மயிற்குரல்—ஒலித்தல்,

கா—கா வென்னும்சத்தம் அடியாகப்பிறந்தசொற்களாவன.

காகம்—காவென்னுஞ் சத்தமிடுவது—காக்கை.

காகளம்—எக்காளம்.

காகுளி—மிடற்றெழுமிசை.

காக்கை—காகம்.

விழு—சீர்மை, சிறப்பு, இடும்பை என்னுங் குறிப்புணர்த்தும் உரி. இவ்வடியாகப் பிறந்த சொற்களாவன.

விழுமம்—சிறப்பு.

விழி—சிறப்பினையுடையது—கண்.

விழா—சிறப்பு.

விழவு—விழா.

விழுதல்—இடும்பையடைதல்—விழுகை.

விழுகை—விழுதல்.

விழைவு—விருப்பம். ஆசைப்பெருக்கம். ஒன்றன்மாட்டுள்ளசிறப்பும்சீர்மையுங் காரணமாகவுண்டாகும் ஆசைப்பெருக்கம்.

வீழ்ச்சி—விழுகை.

வீழ்தல்—ஆசைப்பெருக்கம். விழுகை.

வீழி—வீழிச்செடி.

வீழ்—மரவீழ்.

யாழ்ப்பாணம்
நாவலர்கோட்டம்.
4—11—04.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

---

உ

சிவமயம்.

# இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்.

(௬௩௪-ம் பக்கத் தொடர்ச்சி)

## கார்முகப்படலம்.

பெண்ணிவ ணுற்ற தென்னும் பெருமையா லருமை யான
வண்ணமு மிலைக ளாலே காட்டலால் வாட்டந் தீர்ந்தேன்
தண்ணறுங் கமலங் காளென் றளிர்நிற முண்ட கண்ணி
னுண்ணிறங் காட்டி னீரென் னுயிர்தா வுலோவி னீரோ.

என்னும் சஈ ம் செய்யுளில், 'பெண்ணிவ ணுற்றதென் னும் பெருமை யாலருமையான' என்பது பெண்ணிவ ணுற்றவாறு பேணியே கருமை யான' எனக்காணப்படுகின்றது. உற்றதென்னும் பெருமையாலென்ப தற்கு, உற்றுளென்று கருதும் (உமது) பெருமையினுல் எனப்பொ ருள் கொள்ளுமிடத்து வலிந்துகோடலாய் முடிதலானும், பொருள் சிறவாமையானும் 'பெண்ணிவ ணுற்றவாறு பேணியே' என்பதே சிறப்புடைத்து. 'அருமையானவண்ணமும்' என்பதிலும்'கருமையா னவண்ணமும்' என்பதும் பொருத்தமுடைத்தாதல் காண்க.

எழுச்சிப்படலம்.

கடுகிய தூதருங் காலிற் காலிற்சென்
றிடிகுரன் முரசதி ரயோத்தி யெய்தினு
ரடியிணை தொழுமிட மன்றி மன்னர்தம்
முடியொடு முடிபொரு வாயின் முன்னினுர்.

என்னும் க-ம் செய்யுளில் 'அடியிணை தொழுமிடமன்றி' என்பது 'அடியிணைதொழவிட மின்றி' எனக்காணப்படுகின்றது. அன்றிஎன்ப தற்கு முடிபின்மையானும், வருவித்துப்பொருள்கொள்ளுமிடத்தும் பொருள் சிறவாமையானும் 'தொழவிடமின்றி' எனக்கோடலே சிற ப்புடைத்து.

ஷை

கால்விரிந் தெழுகுடை கணச்கி லோதிமம்
பால்விரிந் ததுவெனப் பறப்ப போன்றன
மேல்விரிந் தெழுகொடிப் படலை விண்ணெலாந்
தோலுரிந் துகுவன போன்று தோன்றுமால்.

என்னும் கஉ-ம் செய்யுளில் 'பால்விரிந்ததுவெனப் பறப்பபோன் றன' என்பது 'பால்சிறை விரித்துவிண் பறப்ப போன்றன' எனக் காணப்படுகின்றது. கால்விரிந்தெழுதல், சிறையை விரித்துவிண் பறப்பது போன்றிருத்தலின் 'பால்சிறை விரித்துவிண் பறப்ப போ ன்றன' என்பதே பொருத்தமுடைத்து. 'பால்விரிந்ததுவென' என் பது பண்பு பற்றியும் உவமைகோடற்கியைந்து நிற்றலின் உவமைக் குவமையாய் வழுவுறுதல் காண்க. பால்-பக்கலில்.

ஷை

மண்க ளிப்ப நடப்பவர் வாணுத
லுண்க ளிக்கம லங்களி னுள்ளுறை
திண்க ளிச்சிறு தும்பி யெனச்சிலர்
கண்க ளித்தன காமன் களிக்கவே.

என்னும் சகூ-ம் செய்யுளில், 'மண்களிப்ப நடப்பவர் வாணுதல்' என்பது 'மண்களிப்ப நடப்பவர் வாண்முக' எனக்காணப்படுகின்றது. 'வாணுதல்' கமலங்களோடியைந்து நில்லாமையானும், வாண்முகம் என்பது இயைந்து நிற்றலானும் 'வாண்முக' என்பதே பொருத்தமுடைத்து.

ஷ

எண்ண மாத்திர மும்மரி தாமிடை
வண்ண மாத்துவர் வாய்க்கனி வாய்ச்சியர்
திண்ண மாத்தொளிர் செவ்விள நீரிழி
அண்ண மார்த்தன தூளியு மார்த்தவே.

என்னும் ருO-ம்செய்யுளில், 'வண்ணமாத்துவர்வாய்க்கனிவாய்ச்சியர்' என்பது 'வண்ண மாத்த துவர்க்கனி வாய்ச்சியர்' எனக்காணப்படுகின்றது. 'வண்ணமாத்துவர் வாய்க்கனிவாய்ச்சியர்' என்பதில் வாய் என்பது பின்னும் வந்துவழூவுறுத்தலின் 'வண்ணமாத்த துவர்க்கனி வாய்ச்சியர்' என்பதே பொருத்த முடைத்து.

ஷ

அருவிபெய் வரையிற் பொங்கி யங்குச நிமிர வெங்கு
மிரியலிற் சனங்கள் சிந்த விளங்களிச் செங்கண் யானை
விரிசிறைத் தும்பி வேறோர் வீழ்மதந் தோய்ந்து மாதர்
சுரிகுழற் படிய வேற்றின் பிடியொடுந் தொடர்ந்து செல்வ.

என்னும் சூஉ-ம் செய்யுளில், 'விரிசிறைத்தும்பிவேறோர் வீழ்மதந் தோய்ந்து மாதர்—சுரிகுழற்படிய வேற்றின் பிடியொடுந் தொடர்ந்து செல்வ' என்பது 'வரிசிறைத்தும்பி யிட்டம் வார்மதந்தோய்ந்து மாதர், சுரிகுழற்படிய வெற்றிப் பிடியொடுந் தொடர்ந்து செல்வ' எனக் காணப்படுகின்றது. 'வேறோர் வீழ்மதந் தோய்ந்து' என்பதுபொருளைச்சிறப்பியாமையின் 'தும்பியிட்டம் வார்மதந் தோய்ந்து' என்பதே பொருத்தமுடைத்து. 'வேற்றின்பிடி' என்பதிலும் வெற்றிப்பிடி என்பதும் சிறப்புடைத்தாதல் காண்க.

ஷ

துப்பினின் மணியிற் பொன்னிற் சுடர்மர கதத்தின் முத்தி
னொப்பற வமைத்த பைம்பூ ணோவியம் புகழ வேறி
முப்பதிற் றிரட்டி கொண்ட வாயிர முகிழ்மென் கொங்கைச்
செப்பருந் திருவி னல்லார் தேர்மிசை சூழப் போனார்.

என்னும் எO-ம்செய்யுளில், 'ஒப்பறவமைத்த பைம்பூணோவியம்புகழவேறி' என்பது 'ஒப்பறவமைத்த தேரிலோவியம் போல வேறி'

எனக்காணப்படுகின்றது. துப்புமுதலியவற்றாற் செய்த தேரில் அத் தேரிலமைத்த ஓர் ஓவியம்போல இவர்ந்து எனப்பொருள்கொள்ளுமிடத்து முன்னையதினும் பின்னையதே பொருத்தமுடைத்து. இன்னும் இச்செய்யுளில் 'தேர்மிசைசூழப்போனார்' என்பது 'தெரிவையர் சூழப்போனார்' எனக்காணப்படுகின்றது. 'ஒப்பறவமைத்ததேரில்' என்னும் பாடத்திற்கு அஃது இயைபுடைத்தாதல் காண்க.

### வரைக்காட்சிப்படலம்.

வெள்ளநெடு வாரியற வீசியுள வேனுங்
கிள்ளவெழு கின்றபுனல் கேளிரின் விரும்பித்
தெள்ளுபுன லாறுசிறி தேயுதவு கின்ற
வுள்ளது மருது தவும் வள்ளலையு மொத்த.

என்னும் உ௩-ம் செய்யுளில், 'வெள்ளநெடு வாரிபற வீசியுளவேனும்' என்பது 'வெள்ளநெடுவாரியுறவீசியிலதேனும்' எனக்காணப்படுகின்றது. வெள்ளமாகியவதிகநீரைக் கொடாதொழிந்ததாயினுந் தோண்டுதலினாலே சுரக்கின்ற நீரையாகுதல் கொடுக்குந்தன்மை எனப் பொருள்கொள்ளுமிடத்து; அது கொடையைச் சிறப்பித்தலின், 'வெள்ளநெடுவாரியுற வீசியிலதேனும்' என்பதே சிறப்புடைத்து. 'உள்ளதுமருதுதவும்' என்பதற்கும் அதுவே பொருத்தமுடைத்தாதல் காண்க.

௸

பேணுதற் கரிய சீயக் குருளையம் பிடிக ளீன்ற
காணுதற் கினிய வேழக் கன்றொடு களிக்கு முன்றிற்
கோணுதற் குரிய திங்கட் குழவியுங் குறவர் தங்கள்
வாணுதற் கொடிச்சி மாதர் மகவொடு தவழு மாதோ.

என்னும் ௩௭-ம்செய்யுளில், 'பேணுதற் கரிய சியக்குருளை' என்பது 'பேணுதற்குரிய மேகக்குருளை' எனக்காணப்படுகின்றது. சீயக்குருளை வேழக்கன்றொடுகளிக்குமென்பதிற் பொருள்சிறவாமையானும் ஒன்றோடொன்று இகலுடைத்தாகலானும் 'மேகக்குருளை' யெனக் கோடலே பொருத்தமுடைத்து. வேழக்கன்றுக்கு மேகக்குருளை உவமையாய்ப் பொருளைச்சிறப்பித்தல் காண்க. பின்னடிகளிலும் திங்கட்குழவியுங் கொடிச்சியர்மகவொடு தவழுமென வுவமைதோன்றவே புணர்த்தல் காண்க.

ஷ

படிகத்தின் றலமென் றெண்ணிப் படர்சுனை மூழ்கிப் புக்க
கடிகைப்பூங் கமல மன்ன சுடர்மதி முகத்தி னார்தம்
வடகத்தோ டுடுத்த தூசை மாசினீர் நனைப்ப நோக்கிக்
கடகத்தை யெறிந்து தம்மிற் கருங்கழல் வீரர் நக்கார்.

என்னும் ௬௮-ம் செய்யுளில், 'கடகத்தை யெறிந்து' என்பது 'கடக க்கையெறிந்து' எனக்காணப்படுகின்றது. 'சுனை' என்பது நனைத்த லாற்றெரிதலின், கடகத்தையெறிந்து அறிந்தார் எனப்பொருள்கோ டல் பொருந்தாமையானும், களிப்பாலெறிந்தாரெனினும் ஆண்டுப் பொருள்சிறவாமையானும் 'கடகக்கையெறிந்து' என்பதே பொருத் தமுடைத்து. நகுதற்குக் கையெறிதலியைபுடைத்தாதல் காண்க.

## பூக்கோய்படலம்.

உலந்தரு வயிரத் திண்டோ ளொழுகிவா ரொளிகொண் மேனி
மலர்ந்தபூந் தொடையன் மாலை மைந்தர்பான் மயிலி னன்னார்
கலந்தவர் போல வொல்கி யொசிந்தன சிலைகை வாராப்
புலந்தவர் போல நின்ற வுளசில பூத்த கொம்பர்.

என்னும் ௧௦-ம் செய்யுளில், 'உலந்தருவயிரத்திண்டோளொழுகி வா ரொளிகொண்மேனி' என்பது 'உலந்தருவயிரத்தோண் மேலொழுக வார்நறையின் மல்கும்' எனக்காணப்படுகின்றது. பூந்தொடையற் கு இயைபுடைத்தாகலின், 'தோண்மேலொழுகவார்நறையின்மல்கும்' என்பதே சிறப்புடைத்து.

ஷ

சந்திக் கலாவெண் மதிவாணுத லாட னக்கும்
வந்திக்க லாகு மடவாட்கும் வகுத்து நல்கி
நிந்திக்க லாகா வுருவத்தின னின்ற போழ்தஞ்
சிந்திக் கலாப மயிற்கண்கள் சிவந்து போனார்.

என்னும் ௨௨-ம் செய்யுளில், 'சிந்திக்கலாப மயிற்கண்கள்' என்பது 'சிந்திப்புதுப் பூவயிற்கண்கள்' எனக்காணப்படுகின்றது. வகுத்து நல்கியது பூவாதலின், 'சிந்திப்புதுப்பூ' என்பதே சிறப்புடைத்தா தல் காண்க. சிந்திக்கலாபமெனக்கொள்ளின், வகுத்துநல்கியது இன்னதென்று தெரியாது மயங்கவைத்தலாய் முடியுமென்க.

(இன்னும்வரும்.)

சி. கணேசையர்.

ஸ்ரீ:

# புகழேந்தி யொட்டக்கூத்தர்.

(செந்தமிழ் ௨-ந்தொகுதி, ௬௦௯-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனிப் பாண்டிமண்டலசதகத்து—

நளனைப் புகழ்கின்ற வெண்பாவைப் பாடிநன் ஞட்கவிதை
கழகத்தின் மிக்க புகழேந்தி யாங்கவி ராசன் றன்னைத்
தளவப் பெருநகை மாதொடு தென்னவன் ருன்மணஞ்செய்
வளவற்குச் சீதன மீந்தது பாண்டியன் மண்டலமே.

என ஓர் செய்யுள் காணப்படுகின்றது. இதனுற் புகழேந்தியார் முதற்கட் பாண்டியன் அவையத்துத் தலைமைப்புலவராயமர்ந்து அவ்வரசனை நாட்கவிபாடினுரெனவும், பின்னர்ப் பாண்டியன் தன்மகளைச் சோழன் மணஞ்செய்துகொண்டபோது அவனுக்குச் சீதனமாகப் பலவரிசைகளுடன் புகழேந்தியாரையும் அளித்தனன் எனவும் தெரியலாகும். தொண்டைமண்டல சதகத்து,

நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்தவித்வ
கோலா கலனெட்டக் கூத்தனை யென்றுதற் கோவியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே.

எனவருதலாற் புகழேந்தியார் சோழனேடு நெய்த்தானம் என்னுந் திருப்பதிசென்று ஒட்டக்கூத்தரை எதிர்த்துத் 'தற்கோவி' என்னுங்கவிதையைப் பாடிச் சோழனுற் பெருமதிப்புப் பெற்றனரென அறியப்படுகின்றது. இங்கு ஒட்டக்கூத்தர் பாடியது 'விக்காவுக்கு' என்னுங்கவிதையாகும். சோழமண்டலசதகத்து:

*"கோலாகல..................................மண்டலமே"

[ஷ மேற்கோள்.]

†"புதுவைச்சடையன்..............................கொண்டோன்"

ஆரவார விலக்கண நூலைந்துமுழங்க வதற்கெதிர்நூல்
பாரின்மீது தமிழ்க்கூத்தன் பாடியமைத்தான் பயனேர்ந்தே
வீரசோழ னுடனிருந்து வியந்தேவீர சோழியநூல்
வாரமேற வரங்கேற்றி வைத்தார்சோழ மண்டலமே.

* † இவ்விரண்டும் இப்பகுதி ௬-ம்பக்கத்துக் காட்டப்பட்டன.

பூணிலாவுங் கம்பனலம் பொலியுந்தமிழாற் பொலிவெய்திக்
காணுமாறு காண்டமுறுங் கதையிற்பெரிய கதையென்னுந்
தாணிலாவுங் கழலபயன் சபையிற்பயிலுத் தரகாண்டம்
வாணிதாசனரங்கேற்ற வைத்தார்சோழ மண்டலமே.

ஒத்ததுணர்ந்த நாடனைத்து மொருங்கேகூடி யுயர்கூத்தன்
கத்தியலையத் துரத்துதலுங் கசிந்துகாழிக் கவுணியர்கோன்
பத்தியுடனே தக்கமகப் பரணிபாடிப் பணியமுத்தின்
வைத்தசிவிகை மகிழ்ந்தேற வைத்தார்சோழ மண்டலமே.

எனவருவனவற்றால் ஒட்டக்கூத்தர் புதுவைக்கணிருந்த சடையன்றந்தையாகிய சங்கரனுக்கு முதற்கண் உதவித்தொழில் புரிந்து கொண்டு வந்தனர் எனவும், இவனை ஆண்டுவதிந்த காங்கேயன் என்னும் உபகாரி யொருவன் ஆதரித்துப்போற்றிக் கல்வி பயிலுவித்துக் கவுடப்புலவன், கவிராக்ஷதன் எனப்பெயர் சிறப்பித்தனன் எனவும், அந்நன்றிபாராட்டிக் கூத்தர் அவ்வுபகாரிமேல் 'நாலாயிரக்கோவை' என ஓர் நூலியற்றின ரெனவும், ஐந்திலக்கணங்கட்கும் ஓர் 'எதிர் நூல்' செய்தமைத்தனரெனவும், இராமாயணத்து உத்தரகாண்டத்தைப்பாடிச்சோழனவையில் அரங்கேற்றினாரெனவும், ஒருகாலத்து நாட்டார் பலரும் ஒருங்குகூடிக் கூத்தனை அலைத்துத் துரத்திய வளவில், ஓரிடத்துப்புக்கொளித்துத் தக்கமகப்பரணிபாடி அதனை நாட்டாருக்கு அறிவிக்க, அவர்கள் கேட்டு மகிழ்ந்து கூத்தர்பாற் செற்றந்தீர்ந்து அவர்க்கு முத்துச்சிவிகை யளித்தனரெனவும் தெரிகின்றன. இக்கூத்தனை நாட்டார்அலைத்துத்துரத்தற்குக்காரணம்- இவர் கவிகளைத்தலையறுத்தமையேயாம்போலும். கூத்தர் நாட்டாராற்றுரத்தப்பட்டபோது திருக்குடந்தையில் வீரசிங்காதன மடத்து ஒளித்திருந்தன ரெனவும், அவ்வமயத்து அம்மடத்தார் தமக்குப் புரிந்த நன்றியைப்பாராட்டி வீரசிங்காதனபுராணம் என ஓர் நூலியற்றின ரெனவும் சொல்லுப. இவரது நாலாயிரக்கோவையிலோர் செய்யுள்வருமாறு;

பதிநோக்கி யன்னையைத் தண்டனிட் டேனெனும் பாங்கியனை
யெதிர்நோக்கி நின்று தழுவுகின் றேனெனு மென்றும்பொன்னி
நதிநோக்கி வாழு நலபுதுச் சேரிநன் னாட்டிலென் றன்
விதிநோக்கிக் காளைபின் மேவுகின் றேனெனும் வேதியரே.

இது சோழமண்டலசதகத்து மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

ரா. இராகவையங்கார்.

# செல்வம்.

(செந்தமிழ், உ-ம் தொகுதி, ௩௭௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

எறும்பானது கிடையாதகாலத்துக்கு உதவுமாறு கிடைத்த காலத்தில் உணவிற்கு உரியவற்றைச் சேர்த்துவைத்துக்கொள்கின்றது. வெய்யிற்காலத்திற் பயிர்பச்சைகளுக்கு ஆகும்படி மாரிக்காலத்தில் ஏரி குளங்களை நீர்நிரப்பிவைத்துக்கொள்ளுகிறோம். ஓடுகிற ஆறு ஓடிக்கொண்டே இராது. ஓடம்விட்ட ஆற்றிலும் அடிசுடும். வந்தாற்சும்மா வரும்; வராமற்போனால் ஒன்றும் வராதிருப்பது முண்டு. ஆபத்தும் சம்பத்தும் ஆருக்குமுண்டு. ஆகவே, மனிதனானவன் கார்காலத்தில் இன்புற்று வாழ்வதற்கு ஆவனவற்றைக் கோடைக்காலத்தில்தானே தேடிவைத்துக்கொள்ளவும், இரவில் சுகமாக உண்டுறங்குவதற்கின்றியமையாதனவற்றைப் பகற்காலத்தில்தானே சம்பாதித்துவைத்துக்கொள்ளவும், முதுமைப்பருவத்தில் முட்டுப்பாடின்றி உண்டு உயிர்வாழ்வதற்கு வேண்டுமவைகளை இளமைப்பருவத்தில்தானே ஈட்டிவைத்துக்கொள்ளவும் முயற்சிசெய்யக்கடவன். பொருடனைப்போற்றிவாழ்.

> வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்.

வருமுன்காப்பவன் புத்தியை வந்தபின்காப்பவன் தள்ளினதுபோல் சிலர் என்னசொன்னாலும் கேட்காமல், முன்பின்பாராமல் "ஊதாரிக்குப் பொன்துரும்பு" என்றபடி கையிற்கிடைத்த பொருளையெல்லாம் செலவழித்துவிட்டு, எய்ப்பில்வைப்பின்றி இடர்ப்படுவர். பிணியினாலேனும் முதுமையினாலேனும் வேறு இடையூறுகளாலேனும் பொருள்தேடும் வழியில்லாதபொழுது, ஒருகாசு கிடைப்பது குதிரைக்கொம்பாகிப் பெண்டிர் பிள்ளைகளோடு இடருறுவர்.

அழகுக்கிட்டால் ஆபத்துக்குதவும் என்றபடி சில பூஷணங்களைத் தேடிவைத்தாலும், ஆபத்துக்கு அவை உதவியாயிருக்கும். வீடுவாயில் தோட்டந்துரவு நிலம்நீர் முதலியவைகளைத் தேடிவைத்தாலும், அவைகளால்வரும் வருமானம் அவ்வாபத்துக்காலத்துக்கு ஆதாரமாகஇருக்கும். செலவுகளும் தானதருமங்களும் போக வரு

வாயில் எஞ்சியதை இறுகப்பிடித்துச்சேர்த்துவைத்தால்மாத்திரமே இவைகளைத்தேடுதல் முடியும். வரவுக்குமிஞ்சின செலவுசெய்யாமலும் வரவத்தனையுஞ் செலவழிக்காமலும் இருப்பவர்களே ஏதாவது சேர்க்கக்கூடும். வரவத்தனையுஞ் செலவழிப்பதே பெரும்பாலார்க்கு இயல்பாக இருக்கின்றது. கொஞ்சமாயினும் இறுகப்பிடித்துச் சேர்மானஞ்செய்கிற வழக்கத்தைக் கஷ்டப்பட்டாயினுஞ் செய்துகொள்ளவேண்டும். வரவுக்குமேற் செலவிடுதலான துர்வழக்கத்தை ஒழிப்பதற்கு இதுவே உபாயம். செலவுகாரனாகிய ஓர் உத்தியோகஸ்தன் ஒரு செல்வனைக் கடன்கேட்டான். "திரும்ப நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்?" என்று கேட்க, "என் சம்பளத்தில் பாதந்தோறும் சேர்த்துத்தருவேன்" என்றான். அதன்மேல் அந்தச்செல்வன் "இதற்குமுன்னேதானே ஏன் அப்படிச்செய்துகொள்ளவில்லை?" என்ன, உத்தியோகஸ்தன் "தெரியாமல் இருந்துவிட்டேன்" என்றான். அதுகேட்டுச்செல்வன் 'ஆனால் நான் தெரிவிக்கிறேன். எப்படியெனில் கடன்தரமாட்டேன் போ' என்றான். அப்பால் உத்தியோகஸ்தன் பணஞ்சேர்க்கத் தொடங்கினான். இப்படிப்பட்ட செல்வர்களே வரவுக்கு அதிகமாக ஓடும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஏழைகளுக்கும் பரமோபகாரிகள். வயதேறவேற சமுசாரபாரம் வெகுவாய்ப் பலத்துவரும். சமுசாரம் பெருகும்போது அதற்கேற்ப வருமானமும் பெருகாவிட்டால், சமுசாரபாரத்தை நிர்வகிப்பது மிகவுங்கஷ்டமாகும். பிள்ளைகளுக்குக் கல்வியாவது வேறு வித்தையாவது கற்பிக்கவேண்டும். பெண்களுக்குக் கல்விகற்பிப்பதோடு பூஷணம் ஸ்ரீதனம் முதலியவைகளைத் தேடவேண்டும். மரம்வைத்தவன் தண்ணீர் வார்ப்பானென்று நம்பிப் பொருள் ஊறுநாளிற் குருட்டுத்தனமாய் அதை வீணில் வாரியிறைத்துவிட்டால், பொருள்வரும் வழி தூர்ந்துபோகும்போது சமுசாரம் வாடிவதங்கிப்போகுமே. யாதொரு தொழிலாகிற வயலிலே சோம்பலென்னுங் களையைப்பிடுங்கி ஊக்கமாகியஎருவிட்டு உழைப்பென்னு நீர்பாய்ச்சி குடி சூது முதலிய பட்டிமாடுகள் மேயாமல் தனமாகிய தானியத்தை விளைத்தவர்கள் தருமமான கடமைகளை யிறுத்து உண்டதுபோக எஞ்சியதைப் பாங்கியாகிய குதிரிற் சேர்த்துவைக்காவிட்டால், கைவரட்சியான கருப்புக்காலத்தில் முதலாளிகளுக்குக் கொத்தடிமை குலவடி

மையாகிப் பஞ்சுபடாத பாடும் படலாகுமே. வருவாயிற்சிறிது தொகையும் இறுகப்பிடியாமல் விடுபவர் இந்த இன்னல்களை எண்ணிப்பார்க்கவேண்டும். தங்கள் எதிரிலே காணப்படும் புதுப்பாடங்களையும் இறந்தகாலத்திற்கண்ட பழம்பாடங்களையும் பலமுறையும் சிந்தித்து அறிவு தெளியவேண்டும்.

கையில் ஒருகாசு மிகுந்திருக்கும்போது, இந்த ஒருகாசு எதற்காகும், இதனால் என்னபிரயோஜனம் உண்டாகப்போகிறது என்று அலக்ஷியமாக எண்ணி அதை வீணிலே செலவழித்தலாகாது. ஒருகாசு பேணின் ஒருகாசு தேறும். தம்படி தம்படியாச் சேர்ந்துதானே ரூபா ஆகும். பலதுள்ளிபெருவெள்ளமல்லவா? அன்றன்று இரண்டணா சம்பாதிப்பவன் தம்படி தம்படியாகச் சேர்த்துவந்தால் ஒருவருஷத்தில் அந்தச்சேர்மானம் ஒருரூபா பதினாலணா ஐந்துபையாகும். தினந்தோறும் நாலணா சம்பாதிப்பவன் கால்காலணாவாகச் சேர்ப்பானால், அவன் ஒருவருஷத்தில் ஐந்துரூபா பதினோரணா மூன்றுபைசேர்க்கலாமே. தினந்தினம் அரைரூபா சம்பாதிப்பவன் ஓரணா வீதமாகச் சேர்த்தால் ஒருவருஷத்தில் இருபத்திரண்டுரூபா பதின்மூன்றணா சேர்க்கலாம். ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை என்கிற கணக்கின்படி, அதாவது ஆயிரநாளில் அதாவது சுமார் இரண்டு வருஷம் ஒன்பதுமாதத்தில், அவன் அறுபத்திரண்டரை ரூபா சேர்க்கலாம். இங்ஙனம் சேர்மானமாகிற தொகை வட்டி முதலியவற்றால் விருத்தியாகிறபக்ஷத்தில், அவன் பத்துவருஷகாலத்தில் முந்நூறு ரூபாவுக்குக் குறையாத முதற்பொருளுள்ளவனாகலாம். தினமானம் அரைரூபா சம்பாதிப்பவனுக்கு இதுஎவ்வளவுசிறந்தமுதற்பொருள். தபாற்சாலைகளிற் பணஞ்சேர்க்கிற பாங்கி ஏற்படுத்தியிருக்கிறது. அதில் இரண்டணாமுதல் எவ்வளவுவேண்டுமானாலும் கட்டிக்கொண்டுவரலாம். மாதம் ஒன்றுக்கு ஐந்துரூபாவுக்குக் காலணாவீதமாக வட்டி கட்டிக்கொடுக்கின்றனர். இருநூறுரூபா வரையில் அங்கே சேர்மானம் பண்ணலாம். இது ஏழைகளுக்கென்றே ஏற்பட்டிருக்கிறது. அவசரமான செலவுநேரிட்டாலும் அவசியமான தொகையை வாரத்துக்கொருமுறை வாங்கிக்கொள்ளலாம். வாரத்துக்கொருமுறை நாலணாகட்டிக்கொண்டுவந்தால் சுவல்பவருமானமுள்ளவர்களும் ஒருவருஷகாலத்தில் வட்டிநீங்கலாகப் பதின்மூன்றுரூபா சேர்க்கலா

மே. மெய்கான்: இவ்விதம் காலணு அரையணுவாகச் சில்லறை சில்லறையாகச் சேர்த்து எக்காலத்திற் செல்வராகிறது என்று நினைக்கலாகாது, கொஞ்சம் வருகிறபோதே பொருள் சேர்க்கிற வழக்கம் இல்லாவிட்டால், அதிகம் வருகிறபோது அவ்வழக்கம் உண்டாகமாட்டாது.

சிறுஞ்செட்டுமாக வரவு செலவுகளை வரையறைசெய்யும் குடித்தனப்பாங்கறியாது திடும்பிரவேசமாகச் செல்வம்பெற்ற வறிஞர்களுக்கு அதை வைத்துப்படைக்க வழிதெரிகிறதில்லை. குமணனிடத்திற் பெரும்பரிசில் பெற்றுவந்த பெருஞ்சித்திரனர் என்பவர் தமது மனையாட்டியை நோக்கி,

நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கு
மன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
மின்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.

என்றுரைத்தனராம். இளஞ்சேட்சென்னியை நோக்கி ஊன்பொதி பசுங்குடையார்,

அரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே அதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின வரைக்கியாக் குநரும்
கடுந்தே ரிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வெளவிய ஞான்றை

நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்
கரூஉ வருநகை யினிதுபெற் றிகுமே.

எனக்கூறியதுபோல, நிதியைக்கண்ட நித்திய தரித்திரர்கள் செய்கை நகைபிழை நாடகமாகவேமுடியும். ஆகையால், சிறிதுசிறிதாகச் சேர்த்து வழக்கப்பட்டவர்களுக்கே பணத்தின் அருமை தெரியும். அவர்களிடம் திடும்பிரவேசமாகவந்த செல்வமும் சீரழியாது நல்வழிப்படும்.

பிள்ளையார்பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்ததுபோல, சிலர் பணஞ்சேர்க்கத்தொடங்கிப் பணப்பேய்களாக முடிகின்றனர். அங்கத்தைக் கட்டியுந் தங்கத்தைச் சேர்ப்பவராகின்றனர். தாக்ஷணியம் தநநாசனமென்றுகொண்டு நிர்த்தாக்ஷணியராகிப் பணமேபெண்டிர் பணமேமக்கள் பணமேஉறவு பணமேநட்பு பணமேமற்றும் முற்றுமாகி, ஊணுமுறக்கமும் ஒழித்துத் தாமும் அநுபவியாமல் பிறரையும் அநுபவிக்கவொட்டாமல் உலோபிகளாகின்றனர். இவர்களிடத்திற் சேர்ந்தபணம் சமணசந்நியாசி கையில் அகப்பட்ட சீலைப்பேனும் நாய்பெற்ற தெங்கம்பழமுமாகும். அப்பொருள் அவரிடம் இருப்பினென்: இராவிடினென் ?

எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பன் யானும்—தனதாயின்
தானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

இவன்

*     *     * வைத்த
பொருளு மவனை நகுமே உலகத்
தருளு மவனை நகும்.

பொருளைச் சேர்த்துவைத்தும்

உண்ணா னொளிநிரு ளோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

சங்கத்தலைவர் தமது முழுநன்றியுங்கூறி வாழ்த்தியதோடு, அவ் வே தாது படம் அச்சபையோர்முன் திறக்கப்பட்டு சபாநாயகரால் ம யணிந்து உபசரிக்கப்பெற்றது. பின் சபாநாயகரவர்களது ஆரம்ப பிரசங்கம், சிறிதாயினும் சபையோர்க்கு மகிழ்ச்சிபெரிதளித்தது. அது முடிந்ததும் சங்காரியதரிசி, அவ்வுற்சவத்துக்கு வரமுடி மைபற்றி எழுதியன்புகாட்டிய அடியிற்கண்ட கனவான்களது த களையும் கடிதங்களையும் குறிப்பித்தார்கள்.

## தந்திகளடித்தோர்.

1. ஸ்ரீமத் பி. வேங்கடசாமிப்பிள்ளையவர்கள், உசூர் சிரேஷ் தார், திருநெல்வேலி.
2. ,, இராஜமையங்காரவர்கள், தமிழ்ச்சங்கம், தஞ்சை.
3. ,, வெங்கடரெங்கய்யர் அவர்கள், மைலாப்பூர்.
4. ,, பூவை. கல்யாணசுந்தர முதலியாரவர்கள், சாவு ர்பேட்டை, சென்னை.

## கடிதங்கள் எழுதியோர்.

5. ,, வே. சாமிநாத ஐயரவர்கள், சென்னை.
6. ,, வை. மு. சடகோபராமானுஜாசாரியாரவர்கள், தி வல்லிக்கேணி.
7. ,, கெ. குப்புசாமி முதலியாரவர்கள், சென்னை.
8. ,, வி. குப்புசாமிராஜு அவர்கள், தஞ்சை.
9. ,, எம். வி. சுப்பிரமணியக் கவிராசர் அவர்கள், திரு நெல்வேலி.
10. ,, ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள், தரங் கம்பாடி.
11. ,, சே. ப. நரசிம்மலுநாயுடுகாரு, கோயம்பு
12. ,, சி. திருச்சிற்றம்பலம்பிள்ளை யவர்கள், ஷை.
13. ,, எஸ். பால்வண்ணமுதலியாரவர்கள், திருநெல்வே

உ

கடவுள்துணை

## மதுரைத் தமிழ்ச்சங்கத்து

# நான்காம் வருஷோற்சவக் கூட்டம்.

தென்றிசை யதற்கோர் திலதம் போன்றதும் செந்தமிழ் நல்வ ளம் சிறக்கப்பெற்றதுமான இம்மதுரைமா நகரில் தாபிக்கப்பெற்ற இத்தமிழ்ச்சங்கம், தனது பலவகைப்பட்ட துறைகளினுஞ் செழிப் புற்று 1905-ஆம் மேமீ 24உ அன்று, தன் நான்காவதாண்டு நிறை வுபெற்று விளங்கியது. இவ்வப்தபூர்த்தி மகோற்சவத்தைக் கொ ண்டாடிக் களித்தற்பொருட்டு, தமிழகத்திற் பலவிடங்களினின்றும் வந்திருந்த சங்கத்தினங்கத்தினராய வித்வான்களும் ஏனைத் தமிழபி மானிகளும், சங்கத்தலைவர் ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவர வர்களால் நல்வரவுகூறி உபசரிக்கப்பெற்றனர். இவ்வுற்சவம் நடாத் தற்கென்று குறிக்கப்பட்டு, பல அலங்காரங்கள் செய்யப்பெற்று விளங்கிய சேதுபதி ஹைஸ்கூல் விக்டோரியா மண்டபத்தில் 24உ மாலை 4-மணிக்கு ஒன்றுகூடியவர்க்கெல்லாம் முதலிற் சிற்றுண்டி, பானக முதலியன வழங்கப்பெற்றன. அதன்பின், அனைவரும் அம் மா சபையிற் கூடியளித்த அழகியகாட்சி சங்கத்திற் கினியுண்டா அளவற்ற பெருமைக்கு முன்னறிகுறியாக விருந்தது.

அம்மகாசபையில், சங்கத்தலைவராகிய தேவரவர்கள் எழுந்து அச்சபைக்கு அக்கிராசனம் வகித்தற்பொருட்டு முன்னரே வேண்டப் ப்பெற்றவாறு, அங்கு விஜயஞ்செய்திருந்த "தபாலிலாகா சூப் பரின்டன்டண்டு" ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்களது தமிழா ராய்ச்சியின் அருமை பெருமைகளைப் புகழ்ந்துபேசி, அவர்களை சபாநாயகம் வகிக்கவேண்டினார்கள். பிள்ளையவர்கள் அங்ஙனமே நாயகம் வகிக்க, முதலில் சங்ககலாசாலை மாணவரால் கடவுள் ...தாகத் தேவாரத் திருவாய்மொழிப் பாசுரங்கள் இனிய குர ...ன் ஓதப்பெற்றன. அதன்பின் சங்கத்திற்குப் பேருதவி புரி ...ாதரிக்கும் மாட்சிதங்கிய புதுக்கோட்டைமகாராஜா அவர்கட்குச்

இதற்கு 'உய்த்திட்டுங்கேனிக்கரி'. அவன் இறுதியில் ஐயோ 'உண்ணுமல் தின்னுமல் 'ஊரம்பலமானேனே' என்றேங்குப்படி நேரும். 'உண்ணுச்சொத்து மண்ணுய்ப்போகும்.'

மூவகையாசையில் ஒன்முன பணவாசையாகிய பேயைப்பரிஷ்காரமாக ஓட்டிவிடவேண்டும். அப்பேய் கோட்பட்டார்க்கு உய்வில்லை. பணமென்ன பாஷாணம். எவருமில்லாத காட்டிற் பணம் பசிக்காகுமா? அதை உரைத்துக்குடித்தால் தாகந்தீருமா? அது போகிற பிராணனை மீட்டுக்கொடுக்குமா?

கோடிபொன் அளிப்பனின்றேகோடிரோர்மாத்திரைக்குள்
ஊடியகிளைக்கோர்வார்த்தைஉரைத்தடைகுவனென்றுலும்
தேடியகால்தூதர்சிமிழ்த்தல்விட்டொழிவரேகொல்?

செலவிடுதலொழியப் பணத்தாலாகும் பயனென்ன? செலவிட்டாலொழிய அதனுலாகும் நன்மையைப்பெறுதலில்லையே. பணத்தைச் சேர்ப்பதெல்லாம் எய்ப்பினில் வைப்பாகும்பொருட்டன்றி வேறில்லை. ஆபத்து ரக்ஷகமாகுமென்று சேர்த்த நிக்ஷேபதனத்தை அதற்காக்காமற் பூசிப்பவர் தங்கள் பணத்துக்குத் தாங்களே அடிமைகளாகி விடுகின்றனர். இவர் செல்வம் எவர்க்கும் நன்றியில் செல்வமே. அது 'நடுவூருள் நச்சுமரம்பழுத்தற்று'.

பொருளைச்சேர்த்துப் பெட்டியில் நிறையவைத்துப் பார்க்கவேண்டும் என்கிற அவாவுடன் அதனைச் சேர்த்தலாகாது. ஏதாவது ஒரு தகுந்த நோக்கத்துடன் மாத்திரமே பொருளைச் சேர்க்கவேண்டும். எதிர்பாராத சில செலவுகள் அப்போதைக்கப்போது நேரிடுவதுண்டு. அவைகளின்பொருட்டு அவரவர்களுடைய வரவிற்கும் நிலைமைக்கும் ஏற்ப இயன்றவளவு சேர்த்துவைக்கவேணடும். கட்டோடே போனுல் கனத்தோடு வரலாமென்கிற விதமாகச் செல்வர்கள் வீட்டிற் பிள்ளைகளுக்குப் பெண்கொள்ளுநிமித்தம் வேண்டிய அளவு சேர்ப்பது ஒன்று. முதுமைப்பருவத்தில் வேண்டிய சௌகரியங்களுக்கு முட்டுப்படாமலிருப்பதற்கு அவசியமான அளவு சேர்ப்பது ஒன்று. மக்களுக்குக் கல்வி கற்பிக்கவும் மணம்புரிவிக்கவும் அவர்களுக்கு வீடு வாயல்முதலிய சௌகரியங்களை ஏற்படுத்தவும் கொள்ளலான தொகையைச்சேர்ப்பது ஒன்று. வர்த்தகமுதலியன செய்து

மக்கள் உய்தற்குதவியாகும் மூலதனத்தைத் தேடிவைப்பது ஒன்று. தான்குடியிருக்கும் ஊரிற் குறையான ஒரு காரியத்தைச்செய்துமுடிப்பது உபகாரமாக இருக்குமென்று தோன்றினல், அதனை நிறைவேற்றுதற்கான முதற்பொருளைச் சேர்ப்பது ஒன்று. ஆயினும் அவ்வக்காலத்தில் தனக்கும் தன்குடும்பத்துக்கும் அத்தியாவசியமான சௌகரியங்களைத்தேடிக்கொள்ளாமல் உலோபஞ்செய்து இதையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்றெண்ணிப் பணம்சேர்ப்பது குற்றம். பிள்ளைகளுக்குக் கல்வி நல்லொழுக்கம் ஜீவிக்குமுபாயம் முதலியவைகளைக் கற்பிக்காமற் செல்வத்தைமாத்திரம் சேர்த்துவைப்பது சீக்கிரத்திற் சீரழிந்துபோகும் நெறியை அவர்களுக்குக் கற்பித்தலேயாம். நாறல்வாயன்தேடவும் ஊத்தைவாயன் உண்ணவுமா? இங்ஙனம் நாறல்வாயன் தேடிவைத்தால் நாளைக்கு எவனாவது கற்பூரவாயன் கைக்கொள்வான்.

(இன்னும் வரும்.)

தி. செல்வக்கேசவராயமுதலியார்.

---

# பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.

## முதல் உபந்நியாசம்.

(செந்தமிழ், உ-ந்தொகுதி, கஙகூ-ம் பக்கத்தொடர்ச்சி.)

இன்று நாம்படிக்கப்புகும் விஷயம் இலகுவானது. கேட்கிறவர்களுக்கு அதிக விபரீதமான ஆக்ஷேபணைகளில்லை. அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறவிஷயத்தில் சிரமசாத்தியமானதொன்று இதிலிருக்கிறது. நான்கு ஆசிரம தர்மங்களினுயர்வைப்பற்றிச்சொல்லுகிறது பொதுவாய்ச்சிரமமானதன்று.

நான்கு ஆசிரமங்களென்பது உயிர்வாழ்க்கையை ஜனனம்முதல் மரணமந்தம் நேர்மையாய் நடைபெறும்படி செய்வதுதான்.

இவைளில் முதலிரண்டான பிர்ஹ்மசரியமும் கிரகஸ்தமும் ஜீவன் பிரவிருத்தி மார்க்கம் பற்றிக்கொள்வன். இது உலகவிகாசம். ஒவ்வொருவனும் தனக்குள்ளே யெம்மாத்திரமாவது இதுபற்றியொழுகுவான். இந்த இரண்டு ஆசிரமங்களும் ஒவ்வொருவனுங் கைக்கொண்டு நடப்பான். மற்றைய இரண்டான வானப்பிரஸ்தம் சந்நியாசம் ஜீவனின் நிவிர்த்திமார்க்கங்களாம். உலகத்தைவிட்டு விலகுதற்குற்ற முறைகளாம். உயிர்வாழ்வின் நேர்மையை அறியவேண்டின் இந்த வேற்றுமை அறியத்தக்கது. ஒவ்வொரு மனிதனும் ஒழுகவேண்டிய நெறியை முன்னோர்கள் இவ்விதம் நான்கு ஆசிரமமாக அழகாய் வகுத்திருக்கின்றார்கள். ஒருவன் அதை அனுஷ்டித்து நடைபெறுவானாகிற் பிரவிர்த்தி தர்மங்கள் இன்னவென்று உணர்வான். முதன்மையில் பிரமசரியநிலைமை சரியானபடிபற்றிச் சீராய்ப்பழகத்தக்கது. பின்னர் கிரகஸ்தநிலைமையில் உலகவிஷயங்களிற் சுறுசுறுப்பாய்ப் பலவாறு தொழில்புரிதல். இதின்பின்னர்ச் சிறுகச்சிறுக உலகப்பற்றினின்று ஒழிதல், உள்நோக்குதல், ஏகாந்தத்தைநாடுதல் உபாசனை, தியானம், உலகவிஷயங்களிலிருக்கின்றவர்களுக்குப் புத்திமதி கற்பித்தல் முதலியன—வானப்பிரஸ்த நிலையின் தர்மங்களாம்.

இதன்பின்னர்ச் சிறுபான்மையாவது அனுஷ்டிக்கக்கூடியதான முற்றும் துறந்தநிலை. இந்தமுறையை அனுஷ்டிக்கிறவன் இதைவிடச்சிறந்ததும் அறிவுக்கு ஒத்ததுமான வேறுமுறை ஜனனமுதல் மரணமீறாக உண்டென்று கருதான். இந்தமுறை ஒருதேசம்பற்றி மாத்திரம் ஏற்பட்ட தர்மமன்று. இது எல்லா ஜாதியாருக்கும் எக்காலத்தும் பொருந்தும். வாழ்நாளில் ஒருபாதி சுறுசுறுப்புள்ள உலகவியாபாரம் பற்றியது. மற்றொருபாதி உபசாந்தியும் ஒழிவும்பற்றியது. கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும், நேர்மை அமைந்த இந்த உயர்வாழ்க்கை நெறி திரும்பவும் அனுஷ்டிக்கத்தக்கது. இப்படியாமாகில் தங்களுக்குரிய காலத்திற்குமுன்னரே கிரகஸ்தர்களாகும்பாலர்கள்இரார். ஒழிவு அமையாமல் இயமன் உயிர்நீக்கும்வரை மணத்திலும் கவுரவத்திலும் பற்றுள்ளவர்களான விருத்தர்களும் இனி இரார்.

மேற்கண்ட நான்கு ஆசிரமங்களை ஒன்றன்பின்ஒன்றாய் எடுத்துப்பேசுவோம். முதன்மையில் பிர்ஹ்மசரியத்தின் பிராசீனமுறை

என்ன ? அதை உங்களுடைய சாஸ்திரங்களில் விரிவாயறிந்துகொள்ளுங்கள். அதை இங்குநான் சுருக்கிச் சொல்லுவேன். ஒவ்வொரு உபயனும் அவனுடைய எல்லாசுபாவங்களும் நன்றாய்ப்பயிற்சியடையும் வண்ணம் ஒரு குருவின் சுவாதீனத்தில் ஒப்புவிக்கப்படுவான். மனிதரியல்புக்குரிய நான்கு முக்கியமான சுபாவங்கள், விகாசிக்குமாறு அவர்களுடைய படிப்பு நடைபெறவேண்டும்.

(1) பாலர்கள் வேதஅத்தியயனம் செய்துவந்தார்கள். சமயநெறிகளைக் கற்றுணர்ந்தார்கள். சமய சாஸ்திரங்களைப் படித்தார்கள். தினந்தோறும் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்களிற் பயின்றார்கள். இவ்விதமாக ஸ்ரீ இராமசந்திரரும் வேதசாஸ்திரங்களைக் கற்றும் காலைமாலை சந்தியாவந்தனம் செய்தும் வந்தார். ஞானம் உதயமாகுதற்குரிய சாஸ்திரப்படிப்பும் கர்மானுஷ்டானமுஞ் செய்து வந்தார். அவருடைய குருவினிடத்தில் எவ்வண்ணம் சாந்தத்திற்கு காரணமான ஆத்மதத்வ சாஸ்திரத்தை உணர்ந்தாரென்றும் கர்மசம்ஸ்காரங்களில் எப்படிப்பயின்று அபிவிர்த்தியடைந்தாரென்றும் நீங்களே தெளிந்துகொள்ளலாம். இப்படிப்பு அவருக்கு வேண்டுவதில்லை ஆயினும் பாலர்கள் அனுஷ்டானத்திற்குத்தாம் திருஷ்டாந்தமாக இருக்கும்படி ஒழுகலாயினர். இது பிராசீனப்படிப்பில் முதன்மையில் கவனிக்கவேண்டிய விஷயம்.

(2) பின்பு பாலர்கள் நீதிமுறைகற்று அதன்படி பயின்றார்கள். ஆத்மார்த்த முறையிலும் நீதிமுறையிலும் பயின்றார்கள். வணக்கம் மரியாதை சத்தியம் தைரியம் வினயம் இம்முறைகளைக்கற்றார்கள். மாதா பிதா குரு இவர்களை வணங்கி யன்புபாராட்டவும் தன்னைப்பேணாது ஜீவகாருண்ணியத்தைக் கைக்கொள்ளவும் அவர்கள் அறிவுறுத்தப்பெற்றார்கள். அவன் பிறர் க்ஷேமத்தைக்கருதுவான் என்றது பாலனுடைய நீதிஅப்பியாசமுறையின் மகுடமாகப் பாவிக்கப்பட்டது.

(3) புலனறிவு அபிவிர்த்திசெய்யப்பட்டது. பலசாஸ்திரங்களைப் பாலர்கள் கற்றார்கள். அவைகளின் தத்துவங்களிலும் அவைகளின் அனுஷ்டானக்கிரமங்களிலும் பயின்றார்கள். மனிதப்பிறப்பின் மூன்றாவதான புலனறிவும் நீதி ஆத்மதத்வஞானம்போன்று அபிவிர்த்தியானது.

(4) பாலர்கள் சரீரப்பயிற்சி செய்தார்கள். விளையாட்டுக்களை யும் சரீரப்பயிற்சிக்குரிய கசரத்துக்களும் குதிரை முதலியன ஏறி நடத்தவும் சாரத்தியஞ் செய்யவும் தங்கள் சரீரங்களைப் பேணவும் மனுஷவுதவி நாடும் மிருகங்களைப் போஷிக்கவும் கற்றுப்பயின்றார் கள். இவ்விதமாகப் படிப்பு எல்லாபாவங்களும் விகாசிக்கும்படியாய் அமைந்திருந்தது. ஆகப்பாலர்கள் உலகவியாபாரத்திற் பிரவேசித் தால் ராஜாங்கத்திற்குத் தகுதியானவர்களாகி தெய்வபக்தி நீதிமு றை கல்வி சரீரபலம் இவைகள் நிறைந்தவர்களாக ஆகிவந்தார்கள். இந்த நான்கு முறைகள்பற்றியே பூர்விகத்தில் இந்தியாவிற் கல்விப் பயிற்சி நடைபெற்றுவந்தது.

இக்காலத்திய ஸ்திதியைப் பார்ப்போம். ஒருபாவம் மாத்திரம் விருத்தியடைகிறது. அதாவது புலனறிவை அபிவிர்த்திசெய்யக் கூடிய படிப்புக்கற்பிக்கப்படுகிறது; ஏனையமூன்றும் கவனிக்கப்படா மல் விடப்படுகின்றன. தத்துவஞானம் நீதிமுறை சரீரப்பயிற்சி இவைகளை முற்றும் விட்டுவிட்டார்கள். புலனறிவை விருத்திசெய் கிறதும் சரியானபடியாகவில்லை. இம்மாதிரியாய படிப்பினால் உல ககாரியத்திற்குத்தகுந்த மனிதன் எப்படி ஏற்படுவான்? ஒரு மனி தனின் நாலிலொருபாகம் மாத்திரம் கல்வியினால் விருத்தியடையப் பெறுகிறது. நீதிமுறையை அசட்டைபண்ணிவிட்டார்கள். தத்வஞா னத்தை முற்றுங் கைவிட்டார்கள். சரீரமோ உயர்ச்சியின்றி துர்ப்ப லமாகவும் அதிகவேலைகொண்டு தளர்ச்சியடைந்திருக்கிறது. இவ்வ ண்ணமாகக் கால்பாகம்மட்டும் அதுவும்பூர்ணமாகவில்லாமல் அறை குறையான விருத்தியம்சம் பெற்றதாயிருக்கின்ற ஜாதியாருக்கு என் னவித யோக்கியதை இருக்கக்கூடுமென்று நினைக்கிறீர்கள்? இம்மாதி ரியான கல்வியின்பயன் என்னை? புத்திநுட்பமுள்ள மனிதர்கள் உ ண்டாகலாம். ஆனால் அவர்கள் சுயநயவிருப்பமுள்ளவர்களாயும் பிறர் க்ஷேமத்தைக் கருதாதவர்களாயும், தேசத்தின் க்ஷேமத்தைக் கொஞ்சமேனும்நினைக்காதவர்களாயும், தாமுண்டு தம்குடும்பமுண்டு: தாம் சௌக்கியமாயனுபவித்தாற்போதும்: பிறர்கஷ்டம் துக்கம் மு தலியன சற்றேனும் கவனியாமல் ஈரமில்லாத நெஞ்சினராயுமிருப் பார்கள். புத்திநுட்பமாத்திரம் பெற்றுச் சிலம் மரியாதை பொது நன்மை பாராட்டுதல் உள்ளபடிவாய்மைபேசுதல் வார்த்தைநேர்மை

ஒழுக்கம்நேர்மை இவைகளின்றி ஒழுகுவார்கள். இந்த ஸ்திதியைத் தான் பார்க்கிறோம். இது, சமயமுறை, நீதிமுறை, இவைகளைக் கற்பிக்காமலிருந்ததின் தோஷப் பயனும். தம் லாபத்தைக்கருதாமல் பிறர் க்ஷேமத்திலேயே கண்ணுகவுள்ளவர்கள் எத்தனைபெயர்கள் இக்காலத்தில் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? பிறர் மேம்பாட்டை அடையாமல் தாம் மேன்மையை யடையவொண்ணுது: என்றுணர்கின்றவர்கள் எத்தனையுண்டென்று நினைக்கிறீர்கள்? எங்கும் வியாபகமாய் எங்கும் நிறைந்ததாயுள்ள பிராணன் ஒன்றேஎன்றும் அதினின்று தம்மை வேறுபடுத்திச் சொந்தலாபத்தைக் கருதிப் பிறர்க்ஷேமத்தில் அலக்ஷியமுள்ளவர்களாய் நடைபெறுவது தமக்கே பிராணஹானி என்றும் பிறருக்கு ஈசுவரப்பிரசாதம் வாராமல் தடுப்போமாகில் அக்கதியே தமக்குமென்றும் தாம்வேறு பிறர்வேறு என்ற சுவரையேற்படுத்தினுல் தமக்கு ஈசுவரன் அருள்இன்றி முடிகிறதென்றும் உண்மைஉணர்கிறவர்கள் எத்தனைபெயர்கள் இக்காலத்திலிருக்கின்றுர்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறது?

இனி நாம் செய்யவேண்டியதென்னவெனில் சங்கல்பமாத்திரம் போதாது; இன்றுசெய்யவேண்டிய வேலையை இனிச்செய்யலாம் என்று இராமல் இன்றேசெய்துமுடிக்சவேண்டும். பண்டைக்காலத்து முறையை இக்காலத்திலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டிய முயற்சி உங்களுடைய பிரயோஜனுர்த்தமாகச் செய்யப்பட்டு வருகின்றது. நான்பேசுகின்ற அறைஅமையப்பெற்ற இந்தக்கலாசாலை பிராசீனக் கல்விமுறையைத் திரும்ப நிலைநாட்டுவதற்காக ஏற்பட்டுள்ளது. அந்த நான்குமடங்கான முறையாற்றுன் இந்தியாவுக்கு க்ஷேமகாலமுண்டாகும். ஆனுல் முன்முறைகள் எல்லாவற்றையும் திரும்ப நடைபெறும்வண்ணம் செய்வதென்று எங்கள் கருத்தன்று. அப்படிச்செய்வதில் ஆதிமுறையின்கருத்துப் பயன்படும்படி தற்காலகதிக்குக்கூறியபடி அதை அமைக்கப்பெறலாகும். ஆங்கிலநாட்டிலும் அதன்பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் மேற்கண்ட நான்குமடங்கான கல்விப்பயிற்சி நாட்டப்பெற்றுவருகின்றதைக் கேட்க நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்போலும். ஆங்கில நாட்டில் எந்தப்பாடசாலைக்குப் போனுலும் தொடக்கத்தில் கடவுள்

வணக்கமும் சமயகிரந்தங்களின்படனமும் நடக்கும். ஒவ்வொருபால னும் ஈசுவர வுபாசனை செய்புமுறை கற்றுக்கொள்ளுகிறான். நீதி முறைகளில் தெளிவாய்ப் போதனை பெறுகிறான். சமயம் நீதி இவ் விரண்டுடன் சரீரப்பயிற்சியும் பழகுகிறார்கள். இது கட்டாயமாய்ப் பழகவேண்டியது. ஒவ்வொரு பையனும் தன்னவயவங்கள் பெலப் படவும் சரீரம் உறுதிப்படவும் விளையாடவேண்டும். கஸரத்துச்செய் யவேண்டும். ஹாரோ, ஈடன், ரக்பி, வின்செஸ்டர் முதலான விடங் களிலுள்ள பள்ளிக்கூடங்களைப் போய்ப்பார்ப்பீர்களாகில் நான் குமடங்கான கல்விப்பயிற்சி கிறிஸ்துமார்க்க நெறியில் நடைபெறு வதைக் காணலாகும். ஆதிமுறைபின் உயர்வான பாவம் ஆசரிக்கப் படுகின்றது. அந்தக்கல்விமுறை நேர்மையுள்ளதாக விருக்கிறது. இதனால் சகலவிதமாகவும் பயின்ற தேசாபிமானமுள்ள மனிதர்கள் உண்டாவதற்கு ஆஸ்பதமாகவிருக்கின்றது. மதாபிமானமும் தே சாபிமானமுமுண்டாகிவருகின்றன. ஹாரோ பாடசாலையைச் சார் ந்த உபாசனைமண்டபத்திற்குட்போய்ப் பார்ப்பீர்களாகில் அதன் சுவ ர்களில் தேசத்திற்கனுகூலமானகிருத்தியங்கள்செய்து மேன்மைபெற் று ஆதியில் அப்பள்ளிக்கூடத்திற்கல்விபயின்றோர்பெயர்கள்பதிந்த தா ம்பிரசாசனங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அம்மண்டபத்தில் அப்பெ யர்வரைந்த தாம்பிரசாசனங்களைப், பையன்கள் ஈசுவரவுபாசனைசெய் கையிற் பார்க்கும்போது, தாம் இப்போது இருக்குமிடத்தில் முன் னிருந்தவர்களான ஹாரோப்பையன்கள் மனிதர்கள் ஆனமேல்தேச த்திற்கும் இராஜாவுக்குமாக ஆபத்துக்காலத்தில் தங்களுடைய உயி ரையே தியாகஞ்செய்து தேசத்தின்மேம்பாட்டை விருத்திசெய்தவ ர்கள் இவர்களன்றோவென்று தங்கள் மனதிற்பதிய, இனி அம்மா திரியே நாமும் நடக்கமுயலுவோம என்னும்எண்ணங்கள் உண்டாகம லிருக்கக்கூடுமா? அம்மண்டபத்தில் ஈசுவர வுபாசனை செய்கிற ஒவ் வொரு பையனுடைய மனசிலும் கௌரவமான ஒழுக்கபாவமும் தே சாபிமான பாவமும் தானேயுண்டாகும். இவ்வுயர்வான பாவங்கள் இம்மாதிரியாகப் பையன்கள் மனசிற்பதிய, தேசாபிமானிகளாகவும் தேசத்தின் க்ஷேமத்தைக் கருதினவர்களாகவும் தம் தேசத்திற்கு கவுரவம் பயக்கக்கூடிய சீலர்களாகவும் ஆகிறார்கள்.

இம்முறையை இத்தேசத்திலும் நாட்டவேண்டும் :— இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்விதம் எப்படி? நாங்கள், 40, 50, பெயர்களா பிறர் உதவியில்லாமல் இப்பெருங்காரியத்தைச் செய்யவல்லவர்? அது சரியல்ல. இது உங்களுடைய விஷயமுமல்லவா? எங்களுடையது மாத்திரமா? உங்களுடைய பிள்ளைகள்தாம் இனி இந்தியாவின் மனிதர்கள் ஆவார்கள். அந்த யோக்கியதைக்குத்தக்க கல்வியைக் கற்பித்துப் பிராசீனதர்மநெறிகளைப் புகட்டவேண்டிய முயற்சி செய்கின்றீர்களா? நான் வசனிக்கிறதை சிலாகித்து ஆரவாரஞ் செய்தால் மாத்திரம் போதாது. இந்தவிதமான படிப்பினை நடை பெறுமாறு வேலை செய்வீர்களா? உங்களுடைய சொந்தக் காரியம்போல், உங்களுடைய காலம் பொருள் முதலியனவற்றை இந்த விஷயத்திற்கு அர்ப்பணஞ் செய்வீர்களா? அப்படிச்செய்யாவிடின் பிறர்செய்கிற வேலையை வீணாகமெச்சுவதில்மாத்திரம் என்ன? அப்படிச்செய்ய நீங்கள் அருகர்களாவீர்கள்.

(இன்னும் வரும்.)

---

# புத்தகக் குறிப்பு.

---

வெனிஸ்வர்த்தகன்.— ஆங்கில மகாகவியாகிய வில்லியம் ஷேக்ஸ்பியரால் இயற்றப்பட்ட அற்புதநாடகங்களுட் சிறந்துவிளங்கும் இதனை, உரையும்பாட்டுமாக, மூனூலிலுள்ளவாறே மொழிபெயர்த்தவர்.—நம் சங்கத்து வித்துவான்களிலொருவரும், சைதாபேட்டை சப்மாஜிஸ்ட்ரேடுமாகிய ஸ்ரீமத்—எஸ். வீ. கள்ளபிரான்பிள்ளையவர்கள், பி. ஏ. ஆவர். தமிழராயினோர், மேற்றிசைக்கவிகளின் உயர்ந்த மனோபாவங்களை நன்குணர்ந்து மகிழ்தற்கு வாய்ப்புடைய கருவிகளுள் இம்மொழிபெயர்ப்புநூலும் ஒன்றென்னத்தட்டில்லை. பிள்ளையவர்கள், கவியின் ஆழ்ந்த கருத்துக்களை ஏற்ற சொற்கொண்டு யாவருக்கும் இனிது விளங்கமொழிபெயர்த்திருத்தல் சாலவியத்தக்கதேயாம். இன்னும், பொருள் செவ்விதின் விளங்கவும், விசேடக் கருத்துக்கள் புலப்படவும், பிள்ளைவர்கள் இறுதியில் எழுதிச் சேர்த்துள்ள அநுபந்தம் பெரிதும் பயன்படத்தக்கது. இவ்வாறே, பின்னும்பல அரிய நூல்களையும் மொழிபெயர்த்துத் தமிழ்வளர்ச்சிபுரிதற்கண் பிள்ளையவர்களை ஊக்கியுதவுமாறு திருவருளைச் சிந்திக்கின்றோம்.—பத்திராசிரியர்.